ஏப்ரல் 9ந் தேதி

வெளிவருகிறது...

சந்திரலேகா

ஜெமினியின்

அற்புதமான

சிருஷ்டி

365
...OF THE REGISTRAR OF...
16 APR 1948
MADRAS



— விநியோகஸ்தர்கள் —

திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்கள் :—சங்கர் பிக்சர்ஸ், ஸ்ரீரங்கம்.
மலபார், இலங்கை, பர்மா ;—டி. கே. எஸ். & பிரதர்ஸ், கோயமுத்தூர்.
சேலம், மைசூர், எப். எம். எஸ்., பங்களூர் :—சேலம் ஷண்முகா பில்ம்ஸ், குகை, சேலம்.
மதருஸ், செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயமுத்தூர், நீலகிரி, ஆந்திரா, வட இந்தியா :—ஜெயா பிலிம்ஸ், செவ்வாய்பேட்டை சேலம்.
மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் :—ராமநாதன் பிக்சர்ஸ், காரைக்குடி.

குண்டூசி

மாஸ சினிமாப் பத்திரிகை

சந்தா விவரங்கள்

உள் நாடு :

வருஷ சந்தா	ரூ.	6
ஆறு மாஸ சந்தா	ரூ.	3
தனிப் பிரதி	அணா	8

இலங்கை :

வருஷ சந்தா	ரூ.	6
தனிப் பிரதி	சதம்	50

வெளி நாடு :

வருஷ சந்தா	ரூ.	9
தனிப் பிரதி	அணா	12

விளம்பர விகிதங்கள்

(ஒரு தடவைக்கு)

முன் பக்க அட்டை	ரூ.	450
கடைசிப் பக்க அட்டை	ரூ.	250
2 & 3-ம் பக்க அட்டை	ரூ.	150
சாதாரண ஒரு பக்கம்	ரூ.	75
சாதாரண அரைப் பக்கம்	ரூ.	40
சாதாண $\frac{1}{3}$ பக்கம்	ரூ.	30

கட்டுரையாளர்களுக்கு

''குண்டூசி''க்கு கேள்விகள், நேயர்களின் அபிப்பிராயங்கள், உங்கள் ஊர் சினிமா நிகழ்ச்சிகள், சினிமா சம்பந்தமான விகடத் துணுக்குகள், கட்டுரை, கதைகள், நாடகங்கள் இவையெல்லாம் வரவேற்கப் படுகின்றன. எழுதி அனுப்புபவைகளைக் காகிதத்தின் ஒரே பக்கத்தில், மையினுல் சுத்தமாக எழுதி அனுப்ப வேண்டும்.

காரியாலயம் :
246, தம்பு செட்டி தெரு,
சென்னை 1.

இந்த ஊசியில்

—*—

தியேட்டர் விடுமுறை ... 5
உள்ளது உள்ளபடி —''ஜடாயு'' 6
படம் எடுத்தல் —சித்திரம் 9
''இது நிஜமா'' —விமர்சனம் 10
'ரத்னமாலா'வில் பானுமதி —ஆர்ட் படம் 13
பி. எஸ். சரோஜா —மூவர்ணப் படம் 14
பி. எஸ். சரோஜா —வாழ்க்கை வர்ணனை 15
ஜெமினி சந்திரலேகா —''சிவம்'' 21
குண்டூசியைக் கேளுங்கள்... 23
செய்திப் படங்கள் 31
நுனிப் புல் —''வெட்டுக்கிளி'' 39
ரத்ன மாலா —படக் கதை 42
பொதுஜனம் பேசுகிருர் ... 44
காந்திஜிக்கு காணிக்கை ... 52
இது செய்தி 54
எம். வி. ராஜம்மா —மூவர்ணப் படம் 55
டி. ஆர். மஹாலிங்கம் —ஆர்ட் படம் 56
தமாஷ் சித்திரம் 58
பிரம்மலோகம் 59
அமெரிக்கர் செய்யும் அற்புதம் —எச். விஜயகுமார் 61
குண்டூசி டைரி 68

தமிழ் நாடெங்கும் வெற்றிகரமாய் நடைபெறுகிறது

பானுமதி நடிக்கும்

பரணியின்

ரத்னமாலா

[தெலுங்கு]

வி. எஸ். ஆர். ஆஞ்சநேயலு

டாக்டர் ஜி. வி. சுப்பராவ்

நாகேஸ்வர ராவ்

ஆகியோரும் நடித்தது

. . . . . ஜுபிடர் ரிலீஸ் . . . . .

ஜெய் ஹிந்த்
வந்தே மாதரம்

பாரத மக்களே!

களைப்பைப் போக்குவது பாரத் பானங்களே!
உணர்ச்சி உண்டாக்குவதும் பாரத் பானங்களே!
உத்ஸாகம் ஊட்டுவதும் பாரத் பானங்கள்தான்!

பாரத மக்களுக்கு பாரத் பானங்கள் மட்டும்தான் பரம திருப்தியைக் கொடுப்பது. பதினைந்து வருஷ அநுபவஸ்தர்களின் அரிய தயாரிப்புகள்

பாரத் பானங்களாகிய ஸோடா, கோலா, சாம்பைன், ஆரஞ்சு, லெம் ஜூஸ், ஸ்பெஷல் எல்லாம் கிடைக்கும்.

பாரத் சோடா கம்பெனி

34, சம்பந்தமூர்த்தி தெரு, :: மதுரை.

பட்டை 1
ஊசி 6

குண்டூசி

மார்ச்
1948

ஆசிரியர்
பி.ஆர்.எஸ்.கோபால்

தியேட்டர் விடுமுறை

சினிமாத் தியேட்டர் ஊழியர்களின் குறைகளை விசாரித்த கமிட்டியினர் சினிமாத் தியேட்டர் ஊழியர்களுக்கு வாரத்திற்கு ஒருநாள் விடுமுறை விட வேண்டும் என்று சிபார்சு செய்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். அந்த சிபார்சை சர்க்கார் அங்கீகரித்து, மார்ச் 1-ந்தேதி முதல் இம் மாகாணத் தியேட்டர் ஊழியர்களுக்கு வாரத்தில் ஒருநாள் விடுமுறை விடவேண்டும் என்று உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர். இதன் பிரகாரம் சென்னைத் தியேட்டர்கள் எல்லாம் பிரதி திங்கட் கிழமைகளிலும் மூடப்பட்டு வருகின்றன.

தியேட்டர்களில் ஊழியம் செய்பவர்களும் மனிதர்கள்தாம். அவர்களுக்கும் வாராந்திர விடுமுறை அவசியந்தான். வருஷம் முன்னூற்று அறுபத்தைந்து நாளும் அவர்கள் ஓய்வொழிவின்றி உழைத்துத் தங்கள் தேக நிலையைக் கெடுத்துக்கொள்ளுவதை நியாய மனப்பான்மை உடையவர்கள் ஆதரிக்க மாட்டார்கள். ஆகவே, சர்க்கார் பிறப்பித்திருக்கும் உத்திரவைப் பற்றியும் யாரும் குறைகூற மாட்டார்கள்.

ஆனால் ஒன்று கூறவேண்டியிருக்கிறது. எல்லாத் தியேட்டர்களையும் ஒரே நாளில் மூடி வருவது ரஸிகர்களுக்குச் சௌகரியமான ஏற்பாடாகத் தோன்றவில்லை. ஹோட்டல்களை மாற்றி மாற்றி, தினத்திற்கொன்றாய் மூடச் செய்திருப்பதைப் போலவே தியேட்டர்களையும் தினத்திற்குச் சிலவாய் மூடச் செய்யலாம். இப்படிச் செய்வதால், ஜனங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தினத்தில் எவ்வித சினிமாப் பொழுது போக்குமே இல்லாமற் போவதை நிவர்த்திக்கலாம்.

அந்தந்த ஊர்களில் உள்ள தியேட்டர்களை பாஷாவாரியாகப் பிரித்து, அதற்கேற்றாற் போல் அவைகளை மாற்றி மாற்றி விடுமுறை விடும்படிச் செய்ய வேண்டும். சர்க்காரும், தியேட்டர்காரர்களும், கலந்தாலோசித்து, பட ரஸிகர்களுக்குப் புதிய உத்திரவினால் ஏற்பட்டிருக்கும் இந்த அசௌகரியத்தைப் போக்குவார்கள் என்று நம்புகிறோம்.



உள்ளது உள்ளபடி

ஜடாயு

பொது ஜன ரஸனையைப் பற்றி முன்பே ஒருமுறை இப்பகுதியில் எழுதி யிருக்கிறேன். பொது ஜனங்கள் என்று ஒரு வர்க்கத்தினர் இருப்பதாக நம் பட முதலாளிகளுக்கு நன்ருகத் தெரியும். அவர்களை நம்பித்தானே இவர்கள் லக்ஷக் கணக்கில் பணம் செலவழித்துப் படம் பிடிக்கிருர்கள். ஆனல் அவர்களுக்குத் தெரியாதது என்ன வென்ருல், இந்தப் பொது ஜனங்களுக்கு ரஸனை இருக்கிறதா என்பதுதான்.

ரஸனை உண்டா?

"பொது ஜனங்களுக்கு கலா ரஸனை உண்டா இல்லையா?" என்று என்னைக் கேட்டால், "உண்டு; இல்லை!" என்றுதான் சொல்லுவேன். அதுவும் சினிமாப் படங்களைப் பார்த்து வரும் பொதுஜனப் பகுதியினருக்கு நான் கூறும் பதில் ரொம்பவும் பொருந்தும். இதை விளக்க ஒன்று கூறுகிறேன், லக்ஷ்மீகாந்தனின் பத்திரிகை ஆயிரக் கணக்கில் விற்பனையாயிற்று. "குண்டூசி" போன்ற உயர்ந்த பத்திரிகைகளையும் ஆயிரக் கணக்கானவர்கள் படிக்கிருர்கள். இதிலிருந்து "பொதுஜனங்களுக்குத் திட்டமான ரஸனை கிடையாது; அவர்கள் தகாததற்கும் தக்கதற்கும் ஆதரவு அளிக்கிருர்கள்?" என்பது நிச்சயமாகிறதல்லவா!

கடமை என்ன?

ஆனல் பத்திரிகைகளை நடத்துபவர்கள், பொதுஜன சேவைக்கு முற்படுபவர்கள், கலைகளைக் கையாள்பவர்கள் இவர்களது கடமை என்ன? பொது ஜனங்களின் ரஸனையை நாளுக்கு நாள் வளர்த்து, அவர்களை மேம்பட்ட மனிதர்களாக்குவதே இவர்களின் நோக்கமாகவும், கடமையாகவும் இருக்க வேண்டும். இப்படி நினைக்கவும், நடக்கவும் தவறும் சுயநலப் பேர்வழிகள் பொது ஜன—தேசத்துரோகிகள் ஆவர். இந்த ஆதர்சக் கண்ணுடன் பார்த்தால் தற்போதைய பட முதலாளிகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்துபேர்களை இந்த துரோகிகள் கூட்டத்தில் தான் சேர்க்கவேண்டி யிருக்கிறது.

சுயநல வாதம்

தாங்கள் செய்யும் தீச் செயலை மறைப்பதற்காக பட முதலாளிகள் வர்க்கம் சொல்லுகிறது: "முதலில் பொதுஜன ரஸனையை உயர்த்தி விட்டால் நாங்களும் உயர்ந்த படங்களையே தயாரிப்போம்" என்று. இதில் ஓரளவு உண்மை உண்டு என்ருலும், பூராவாக ஆமோதிக்கக் கூடியதல்ல. பொதுஜன கலா ரஸனையை வளர்ப்பதற்கு சினிமாப் பத்திரிகைகள் சதா உழைத்து வருகின்றன. ஆனல் பத்திரிகை படிப்பவர்களை விடப் பன்மடங்காக உள்ள (பத்திரிகைகள் படிக்காத) ரஸிகர்களின் ரஸனையை எவ்வாறு உயர்த்துவது? பத்திரிகைகள் எவ்வளவு கண்டித்து எழுதினலும் பட முதலாளிகளின் கக்ஷியே ஜயித்து வருவதற்கு இதுதான் காரணம். ஆதலால் உண்மையில் பொதுஜன

ரஸனை அபிவிருத்தி அடைய வேண்டுமானல் அதற்குப் பத்திரிகைகளுடன் கூட வேறு சக்தி வாய்ந்த சாதனமும் அவசியமாகும்.

ரஸிகர்கள் சங்கம்

பத்திரிகைகளைப் படிப்பவர்களான கலா ரஸனை மிகுந்த பட ரஸிகர்கள் தீவிரமான பிரசாரத்தின் மூலம் தங்கள் சகோதரப் பொது ஜனங்களின் கலா ரஸனையை வளர்க்க முயற்சிக்க வேண்டும். இப்படி அவர்கள் தனிப்பட்ட ஹோதாவில் செய்ய முற்பட்டால் அதிகமான — துரிதமான—பலன் ஏற்பட்டு விடாது. ஆனல் அவர்களில் பலரும் ஒன்று சேர்ந்து, சங்கங்களை அமைத்துக் கொண்டு உழைப்பார்களானல் நிச்சயம் பலன் கிடைக்கும். எனவே, இந்த நோக்கத்துடன் சென்னையில் முதன்முதலாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "சினிமா ரஸிகர்கள் சங்க"த்தை முழு மனதுடன் ஆசி கூறி வரவேற்கிறேன். இதுபோன்ற சங்கம் பல வருஷங்களுக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும். இச்சங்கம் நிலைத்து, நின்று, தன் கடமையைச் சரியான முறையில் நிறைவேற்றி வருமானல் எதிர்காலத்திலாவது நம் சினிமாக் கலை உருப்படுவதற்கு வழி ஏற்படக் கூடும்.

செய்ய வேண்டியதென்ன ?

சினிமா ரஸிகர்கள் சங்கத்திற்கு எதிர்காலம் பூராவும் அதை நடத்துபவர்கள் வசமே இருக்கிறது! பொது ஜனங்களின் கலா ரஸனையை வளர்க்க அவர்கள் தீவிரமாகப் பாடுபட வேண்டும். பொது ஜனங்கள் பார்க்கத் தகாத படங்களை எதிர்த்து தீவிரமாகப் போராட வேண்டும். அவசியம் ஏற்பட்டால் மறியல் செய்து ஜெயிலுக்குப் போகவும் தயாராக வேண்டும். பொதுஜனங்களின் அபிப்பிராயங்களை அவ்வப்போது புதுப் படங்கள் வெளி வரும்

ஏப்ரல் மாஸ "குண்டூசி"

"குண்டூசி" தோன்றி ஆறே மாஸங்கள்தான் ஆகின்றன. ஆனல் அதற்குள் அது சினிமாப் பத்திரிகை உலகில் ஒரு பெரும் புரட்சியை உண்டு பண்ணிவிட்டது.

விநியோகத்திலும், விஷயச் சிறப்பிலும், கவர்ச்சியிலும் "குண்டூசி" இப்பொழுது முதன்மை ஸ்தானத்தைப் பெற்று, சினிமா ரஸிகர்களின் அபிமானப் பத்திரிகையாக விளங்கி வருகிறது.

நேயர்கள் "குண்டூசி"க்களித்திருக்கும் இந்த அபாரமான ஆதரவிற்காக நாம் நன்றி கூறிவிட்டு மட்டும் திருப்தி அடைந்துவிட நினைக்கவில்லை. "குண்டூசி"யை மேலும் பல் வகையிலும் சிறப்பிக்கச் செய்து அதன் மூலமே எம் நன்றியை நிரூபிக்க விரும்புகிறோம்.

ஏப்ரல் மாஸ "குண்டூசி" முதல் பக்கம் முதல் கடைசி வரையில் முழுதும் புது மணத்துடன், புதிய அம்சங்களுடன் விளங்கும். தவருமல் வாங்கிப் பாருங்கள்.

அடுத்த மாஸ ஊசியில்

வி. எஸ். வெங்கடேசன்

எழுதிய

காஷ்மீர் கைகுட்டை

என்ற விசேஷ சிறுகதை படங்களுடன் வெளிவரும்

போதெல்லாம் தெரிவிக்க வேண்டும். இவ்வபிப்பிராயங்களைத் தணிக்கை போர்டாருக்குத் தெரிவித்து, அவர்கள் சகாயத்தையும் நாட வேண்டும். இன்னொரு பக்கம் தொழில் சம்பந்தப்பட்டவர்களிடமும் பரிச்சயம் வைத்துக்கொண்டு, அவர்களில் சிறந்த கலைஞர்களை வரவழைத்து சினிமாக் கலை நுணுக்கங்களைப் பற்றிப் பிரசங்கம் செய்யவும். அப்பிரசங்கங்களை ஏராளமான பட ரஸிகர்கள் கேட்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். படம் பார்ப்பவர்களின் பொதுநலத்திற்காக இவர்கள் இன்னும் எவ்வளவோ செய்யலாம்.

ஆனால் சினிமாத் தொழிலில் நேர் முகமாகவோ, மறை முகமாகவோ சம்பந்தமுள்ளவர்களை இந்தச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளவே கூடாது. இது பூராவாக பொதுஜனங்களின் ஸ்தாபனமாகவே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அங்கத்தினர் சக்தி வாய்ந்த முறையில் தீர்மானங்களை நிறைவேற்றவும், நிறைவேற்றி வைக்கவும் சாத்தியமா யிருக்கும்.

சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கம் சக்தியும் செல்வாக்கும் உள்ள ஸ்தாபனமாக ஆக வேண்டுமானால், தமிழ் நாடெங்கிலும்—சினிமாக் கொட்டகைகள் உள்ள ஒவ்வொரு ஊரிலும்—ஒவ்வொரு கிளைச் சங்கம் ஏற்பட வேண்டும். எல்லா ஊர்களிலும் உடனடியாக கிளைச் சங்கங்களை ஏற்படுத்துவது சாத்தியமா யிராவிட்டாலும், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் போன்ற பிரதான நகரங்களிலாவது கிளைச் சங்கங்களை ஸ்தாபிக்க இந்தச் சங்கத்தினர் உடனே முயற்சிக்க வேண்டும்.

பொது ஜனங்கள் தங்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள இச் சங்கத்தில் ஏராளமாய் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்து, சங்கத்தைப் பலப்படுத்த வேண்டும். இச்சங்கம் சினிமா ரஸிகர்களுக்குள்ள குறைகளை நிவர்த்திப்பதற்காக தீவிரமாய் பாடுபடுமென்ற பூரண நம்பிக்கையுடன் இச்சங்கத்திற்கு என் ஆசியைக் கூறுகிறேன்.

P.V. RAJAN & CO

MANUFACTURERS OF

MADRAS SNUFF

R.S. SUGANTHA MOOKKUTHOOL

பி.வி.ராஜன் பட்டணம் பொடி

పి.వి.రాజన్ మదరాసు నశ్యము

ARKONAM & MADRAS

Telegrams: "NASYAM"

படம் எடுத்தல்

இது நிஜமா — நூதன முயற்சி

இரட்டை வேஷங்களில் பாலசந்தரின் சிறந்த நடிப்பு

புராணப் படங்களையே பார்த்துப் பார்த்து சலிப்புற்ற ரஸிகர்கள் சமூகப் படங்கள் தொடர்ந்து வெளி வருவது கண்டு மகிழ்வுற்றனர். திரும்பத் திரும்ப சமூகக் கதைகள் என்ற பெயரில் ஒரே மாதிரியான போக்குடைய படங்களைப் பார்த்துச் சலிப்படைந்த அவர்களுக்கு, நூதன கதைப் போக்கு அமைந்த "இது நிஜமா" உண்மையில் ஒரு பெரிய ஆறுதல்.

மாதுவும் கோபாலும் ஒரே முகச் சாயல் கொண்ட, இரட்டையர்கள். மாது சீமையில் படித்து வருகிறான். கோபால் சென்னையில் வாத்தியக் கடை வைத்திருக்கிறான். நளினிக்கும் கோபாலுக்கும் காதல் ஏற்படுகிறது. "சிற்பியின் காதல்" நாட்டிய நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்ட மாது, நிர்மலா இருவரும் காதலராகிறார்கள். பொறாமை கொண்ட ஷண்முகம் மாதுவைக் கொலை செய்து அவன் இந்தியாவுக்கு ஓடிவிட்டதாக நிர்மலாவிடம் தெரிவிக்கிறான். நிர்மலா காதலனைத் தேடி இந்தியா புறப்படுகிறாள். ஷண்முகம் பின் தொடருகிறான். ஷண்முகத்தைப் பழி வாங்க மாதுவின் ஆவியும் இந்தியா வந்து, கோபாலிடம் எல்லா விபரங்களையும் கூறுகிறது. போராட்டம் நடக்கிறது. ஷண்முகம் தவறுதலாக நிர்மலாவைக் கொன்று, தன் முடிவையும் தேடிக் கொள்கிறான். உண்மை வெளியாகிறது. நிர்மலாவின் ஆவி மாதுவின் ஆவியுடன் ஒன்று சேருகிறது. கோபால்—நளினி கல்யாணமும் நடைபெறுகிறது.

"அதிசய மனிதன்" என்ற ஆங்கிலப் படத்தின் கதையைத் தழுவி எழுதப்பட்ட கதை. சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் கோர்வையாக, அடுத்து நடப்பதென்ன என்ற ஆவல் எழும்படி, அமைக்கப்பட்டிருப்பது நன்றாக யிருக்கிறது. சம்பாஷணைகள் சிறப்பாயில்லை. மட்டமென்று தள்ளிவிடவும் முடியாது. பல பத்திரிகைகளில் வெளியானவிகடத்துணுக்குகள் சம்பாஷணையில் புகுத்தப்பட்டிருக்கின்றன. ஹாஸ்யம் கதைப் போக்கிலேயே அமைக்கப்பட்டுள்ளது போற்றப்பட வேண்டியதாகும்.

மாது, கோபால் இவை ஒன்றுக்கு மற்றொன்று நேர் மாறான குணமுள்ள பாத்திரங்கள். இரு பாத்திரங்களிலும் நடிக்கும் பாலசந்தர் நன்றாக நடித்திருக்கிறார். மாதுவாக நடிப்பதைவிட அசட்டு கோபாலாக நடித்திருப்பது இயற்கையாக அமைந்திருக்கிறது. ஆனால் சில இடங்களில் அவரது நடிப்பு மிகையாகஇருக்கிறது.

நளினியாக நடிக்கும் சரோஜினி பிரமாதம் என்று சொல்ல முடியாவிட்டாலும் கூடியவரையில் குற்றமற்ற வகையில் நடித்திருக்கிறார். குமாரி ராஜமும் பரவாயில்லை. டாக்டர் சுதர்சனின் பாகம்தான் பட ஆரம்ப முதல் கடைசி வரை கவனத்தைக் கவருகிறது. டாக்டராக நடிக்கும் சீதாராமன் திறம்பட நடிக்கிறார். அவரது நடிப்பும், ஹாஸ்யமும் உயர்தரத்தைச் சேர்ந்தவை. படத்தின் வெற்றிக்குப் பெரிதும் உதவுவது அவரது நடிப்புத் தான். "எங்கிட்ட எப்பவுமே ஒரு பிரின்ஸிபிள்" என்ற அவர் சம்பாஷணையும், அதை அவர் கூறும் தோரணையும் யாரையுமே சிரிக்க வைக்கும். மற்ற நடிகர்கள் பரவாயில்லை.

நக்ஷத்திர நடிகர்கள் இல்லாமல் டைரெக்டர் தமது திறமையால் ஒரு

நல்ல படத்தைத் தயாரிக்க முடியும் என்பதற்கு, கிருஷ்ண கோபாலின் டைரெக்ஷனில் தயாரான இந்தப் படம் ஒரு உதாரணமாகும். படத்தின் பிற்பகுதியில் வரும் 'ஸ்டன்ட்' காக்ஷிகள் அனாவசியமாகவும் கதையின் விருவிருப்பான போக்கைத் தடைப் படுத்துவதாகவும் இருக்கின்றன. போலீஸாரும், டாக்டரும் கோபாலைத் துரத்திக் கொண்டு போகும் கட்டம் கேலிக் கூத்தாகவும் பொது மக்களின் பொறுமையை சோதிப்பது போலும் அளவுக்கு அதிகமாயிருக்கிறது. இவைகள் (கத்தரிக் கோல் பிரயோகத்தினால்) நிவர்த்திக்கக்கூடிய குறைகள்.

படத்தின் மற்றொரு சிறந்த அம்சம் ஒளிப்பதிவு. காமிரா நிபுணரான கிருஷ்ண கோபால் சரியான கோணங்களைக் கையாண்டிருப்பதுடன், வெளிச்ச ஏற்பாடுகளிலும் சிரத்தை எடுத்துக் கொண்டிருப்பது மெச்சத்தக்கது.

சங்கீதம் என்ற அம்சம் படத்தில் மிகவும் பலஹீனமாக இருக்கிறது. ஒரு பாட்டாவது மனதில் பதியக் கூடிய வகையில் அமைய வில்லை, பாட்டுகளின் கருத்தும் பிரமாதமாக இல்லை. ஆனால் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி பின்னணி வாத்தியங்களை ஒலிக்கச் செய்திருப்பது கன ஜோர், சீமையில் நடப்பதாக உள்ள சம்பவங்களுக்கு மேனாட்டு வாத்தியங்களையும், சென்னையில் நடப்பதாக உள்ள நிகழ்ச்சிகளுக்கு இந்திய வாத்தியங்களையும் அமைத்திருப்பது பாராட்டப் பட வேண்டிய அம்சம்.

பட ஆரம்பத்திற்கு ஒரு புதிய முறையைக் கையாண்டிருப்பது நூதனமாயிருப்பதும், "சிற்பியின் காதல்" என்ற நாட்டிய நாடகம் மனதைவிட்டு அகலாத முறையில் சிறப்பாக அமைந்திருப்பதும் இரு விசேஷ அம்சங்கள்.

—"லால்ஜீ"

மதுரையில்

நாகரீக ஜவுளிகளுக்கு

நம்பிக்கையான இடம்

நீல மாளிகை

கே. எஸ். பெருமாள் முதலியார் & சன்,

3/4, தெற்கு சித்திரை வீதி, மதுரை.

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதருஸ்.2.

பி. எஸ்.
சரோஜா

பி. எஸ். சரோஜா

வாழ்க்கை வர்ணனை

நான் ஏழெட்டு வயதுப் பையனாயிருந்த போது நிகழ்ந்த சில சில்லரைச் சம்பவங்கள் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றன. பள்ளிக்கூடத்திலிருந்து வரும் வழியில் வண்டி வேலை செய்யும் ஒரு கொல்லன் பட்டறை இருந்தது. "கொல்லன் பட்டறையில் ஈக்கு என்ன வேலை?" என்று கேட்பார்கள். ஈக்கு மட்டுமல்ல; எனக்கும் கூட அங்கு ஒரு வேலையும் கிடையாது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் தகதக வென்று கனல் வீசும் உலையிலிருந்து சடசட வென்று கிளம்பும் நெருப்புப் பொறிகளும், கிறுகிறு வென்று சுத்தப்படும் துருத்திச் சக்கரமும், ஒரு இரும்பைப் பட்டறைமீது வைத்து விட்டு இருவர் அதன் மீது சம்மட்டியால் (தாளம் பிசகாமல்) அடிப்பதும் என்னைக் கவர்ந்து, மணிக்கணக்கில் அந்தப் பட்டறையின் வாயிலில் நிற்கச் செய்துள்ளன. இப்படி வெகு நாள் நின்று தவம் செய்த பின் மெதுவாக பட்டறைக்காரனை ஸ்நேகம் பிடித்துக் கொண்டு ஒரு அரைமணி நேரம் அந்தத் துருத்திச் சக்கரத்தைச் சுற்றும் "பாக்கிய"த்தை பெற்றபோது நான் அடைந்த சந்தோஷம் கொஞ்சநஞ்சமல்ல!

கொல்லன் பட்டறையில் இவ்வளவு மோஹம் கொண்டிருந்த நான், அந்தப் பட்டறையிலேயே வேலைக்கமர்ந்து விடாமல் தற்போது சினிமா உலகில் 'குண்டூசி'யாய் விளங்கி வருவதற்காக நீங்கள் ஆச்சரியப்படக்கூடும். இந்த விஷயம் எனக்கென்னவோ ஆச்சரியமாயில்லை. ஆனால் பால்யத்தில் சர்க்கஸ் வித்தைகளை யெல்லாம் ஊக்கமுடன் கற்றுக் கொண்ட பி. எஸ். சரோஜா ஒரு சர்க்கஸ் நக்ஷத்திரமாய் விளங்குவதற்குப் பதில் இப்பொழுது ஒரு நடன சினிமா நக்ஷத்திரமாக விளங்கி வருவது தான் எனக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது.

நான்கு வயது நிரம்பியதும் பி. எஸ். சரோஜாவை அவரது பெற்றோர்கள் (சென்னையில்) உள்ள ஸெயின்ட அன்டனிஸ் கான்வென்ட் பள்ளிக்கூடத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டனர். சரோஜா அங்கேயே தங்கி ஒன்பதாவது வயது வரையில் படித்தார். தம் ஒன்பதாவது வயது முதல் தம் பெற்றோர்களுடனே வசித்துக் கொண்டு அந்தப் பள்ளியிலேயே மூன்றாவது பாரம் வரை தொடர்ந்து படித்து வரலானார்.

இந்தச் சமயத்தில் "தமிழ் நாடு சர்க்கஸ்" என்ற பெயருடைய ஒரு புதிய சர்க்கஸ் கம்பெனி ராயபுரத்தில் உருவாகிக் கொண்டிருந்தது. இதை முன்னிட்டு ராயபுரத்தில் அவர்கள் கூடாரம் அமைத்து சர்க்கஸ் வித்தைகளைப் பழகிக் கொண்டு வந்தனர்.

இந்த சர்க்கஸ் கூடாரம் சரோஜா பள்ளிக்குப் போகும் வழியில் அமைக்கப் பட்டிருந்தது. இதற்குள் என்ன தான் செய்கிறார்கள் என்பதை அறிய ஆவல் கொண்ட சரோஜா பக்கப் படுதாக்களின் இடுக்கு வழியாக மெதுவாக எட்டிப் பார்த்தார். ஸ்ரீ. டி. எம். நமஸ்ஸு என்பவர் தம் சிஷ்யர்களுக்குத் தேகப்பயிற்சி வித்தைகளை கற்றுக்

குண்டூசி

கொடுத்துக் கொண்டிருந்தார். இந்த வித்தைகள் சரோஜாவை மிகக் கவர்ந்தன. அதன் விளைவாக அவர் தினசரி பள்ளிக்கூடத்தி லிருந்து திரும்பும் போது இவைகளை ஒட்டுப பார்பபதை ஒரு வழக்கமாகவே ஆக்கிக் கொண்டு விட்டார். வீடு திரும்பியதும் தாம் கண்ணால் பார்த்ததை ஒருவருக்கும தெரியாமல் அப்படியே செய்து பார்ப்பார். ஆரம்பத்தில் கடினமாய் தோன்றிய இவ் வித்தைகள் போகப் போக சரோஜாவுக்குச் சுலபமாய் வரத்தொடங்கி விடடன. இப்படியே பல தினங்கள நடநது வந்தன

கடைசியில், இன்னும் அதிக வித்தைகளை அந்த வாத்தியாரிடமம சேர்ந்து கற்றுக் கொள்ள வேண்டு மென்ற திடமான எண்ணம் சரோஜாவின் மனதில் பதிந்து விட்டது. அதன பேரில் அவர் மிகத் தைரியம் கொண்டு நேராக ஸ்ரீ நமஸ்வாவிடமே சென்று தம இஷ்டத்தைத் தெரிவித்தார். தாம் கறறுக் கொண்டிருந்த சில சாதாரண வித்தைகளையும் அவரிடம் செய்து காட்டினார். ஸ்ரீ. நமஸ்வா சரோஜாவைத தம் கோஷ்டியில சேர்த்துக் கொண்டு அவருக்கு தேகப்பயிற்சி வித்தைகளைச சொல்லிக கொடுப்பதற்குச் சம்மதித்தார்.

"சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க வேண்டுமே" என்று சொல்லுவார்கள். அது போல ஸ்ரீ நமஸ்வா ஒப்புக் கொண்டாலும், சரோஜாவின் தாயார் முதலில் சரோஜா இநத வித்தைகளைக் கற்றுக் கொள்ளக் கூடாதென்று தடுத்தார். ஆனால் சரோஜா அழுது, கெஞ்சி, தாயாரின் மனதை மாறறி, அவர் அனுமதியைப் பெற்று விட்டார்.

சரோஜா சர்க்கஸ் கோஷ்டியில் சேருவது சாத்தியமில்லை எனறும், படிப பிறகு பங்கம் விளையாதபடியும், தகபபனுககு இவ்விஷயம் தெரியாதபடியும் வேண்டுமானால் கற்றுக் கொள்ளலாம் என்றும் அவரது தாயார் தீர்மானமாய் கூறிவிட்டார். இத் தீர்மானப்படியே சரோஜா தினம் தினம் சாயந்திர வேளைகளில் ஸ்ரீ. நமஸ்வாவிடம் வித்தை கற்க ஆரம்பித்தார். அவருக்கு இவ் வித்தைகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஊக்கம் அளவு கடந்திருந்ததால், ஆசிரியரே ஆச்சரியப்படும்படி பார் வேலைகள், தேகபபயிற்சி வித்தைகள் முதலியவைகளை அதிதுரிதமாய்க் கற்றுக் கொண்டு விட்டார்,

இப்படி இரண்டு வருஷம் பயிற்சி நடைபெற்றது. ஆனால் அதற்குள் இந்த சர்க்கஸ் கம்பெனி நிர்வாகத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டு. இந்த, கோஷ்டி

பொது ஜனக் காக்ஷியை நடத்தாமலே கலைந்து போயிற்று. இந்த சர்க்கஸ் மட்டும் காக்ஷி நடத்த ஆரம்பித்திருந்தால் சரோஜா இன்றையதினம் ஒரு சினிமா நக்ஷத்திரமாகியிருக்க முடியாதென்பது உண்மை.

ஸ்ரீ. நமஸ்— தம் சிஷ்யர்களுக்குக் கற்றுக் கொடுத்த வித்தைகளை எப்படியும் பொது ஜனங்களுக்குக் காட்டிவிட வேண்டுமென்ற ஆசை கொண்டார். அதற்கான ஒரு சந்தர்ப்பமும் அவருக்குக் கிடைத்தது. ராயபுரத்தில் (சுமார் பத்து வருஷங்களுக்கு முன்) ராஜாஜி அவர்களின் தலைமையில் நடந்த ஒரு காங்கிரஸ் கூட்டத்தின் முன் ஸ்ரீ. நமஸ்—வும், (சரோஜா உள்பட) அவரது சிஷ்யர்களும் தங்கள் திறமைகளை வெளியிட்டனர். ஸ்ரீ. ராஜாஜி, அவர்களை மிகப் பாராட்டிப் பேசினார்.

இந்த சம்பவம் சரோஜாவின் வாழ்க்கையில் ஒரு புதிய மாறுதலை ஏற்படுத்தியது. காங்கிரஸ் ஊழியத்தில் தீவிரப் பற்றுடையவரும், "ஆனந்த விகடன்" அச்சாபீஸில் ஊழியம் செய்து வருபவருமான ஸ்ரீ. தக்ஷிணாமூர்த்தி மேற்படி காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். அவர் சரோஜா செய்து காட்டிய வித்தைகளைக் கண்டு பிரமித்துப் போனார். பிறகு சரோஜாவை நெருங்கி அவரைப்பற்றிய எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டதும் ஆரம்பத்தில் ஏற்பட்ட பிரமிப்பு பிறகு அவர் மீது அக்கறையாக மாறியது. சரோஜாவின் துறுதுறுப்பான நடத்தையையும், உயிரையும் மதியாது எதையும் செய்யும் துணிவையும், கண்ணால் பார்ப்பதைக் கண்டிப்பாய் செய்து விட வேண்டுமென்ற ஆர்வத்தையும் கண்ட தக்ஷிணாமூர்த்திக்கு சரோஜாவை சினிமாவில் சேர்த்து விட்டால் விரைவில் முன்னுக்கு வந்து விடுவார் என்ற எண்ணம் உதயமாயிற்று. அதன்படியே தம் முதலாளியின் ஸ்டுடியோவான ஜெமினியில், ஐம்பது ரூபாய் மாதச் சம்பளத்தில், ஒரு உப நடிகையாக சரோஜாவைச் சேர்த்து வைத்தார்.

ஜெமினி ஸ்டுடியோ அப்பொழுது "மதனகாமராஜன்" படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தது. அவருடைய பாட்டையும், பேச்சையும், நடையுடை பாவனைகளையும் கண்ட பலரும் அவர் சீக்கிரத்தில் முன்னுக்கு வந்து விடுவார் என்று எதிர்பார்த்தனர். "மதனகாமராஜனி"ல் அவருக்கு பிரேமாவின் பிரதம தோழியான ரஸிகாவின் வேஷத்தைக் கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ

விசித்ரவனிதா

விசித்ரவனிதா

விசித்ரவனிதா

அவருக்கு அந்த வேஷம் கிடைக்காமற் போய் விட்டது. அதற்குப் பதில் தோழிகள் கும்பலில் ஒருவராகத் தோன்றி 'கும்பலோடு கோவிந்தாவாக' கோரஸ் பாடியிருக்கிறார். அந்தப் படத்தில் நில் கலந்து கொண்டது அவருக்கும் திருப்தி அளிக்கவில்லை; படம் பார்த்தவர்களுக்கும் திருப்தி அளிப்பதாயிருக்கவில்லை. எனவே சில மாதங்களுக்குப் பிறகு அவர் ஜெமினியிலிருந்து விலகி ஜூபிடர் பிக்சர்ஸில் சேர்ந்தார்.

"கிரஹ லக்ஷ்மி" தெலுங்குப் படத்தைப் பார்த்தது முதலே சரோஜாவுக்கு நடனமாடக் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது, சர்க்கஸிற்காக உடம்பை நெளிக்கவும் வளைக்கவும் கற்றுக் கொண்டிருந்த அவருக்கு நடனம் ஆடுவது கஷ்டமான காரியமல்லவே? இதற்கான சந்தர்ப்பம் அவருக்கு ஜூபிடரில் சேர்ந்தவுடன் கிடைத்தது. அக் கம்பெனியார் "கண்ணகி" படத்துடன் காட்டுவதற்காக குறவஞ்சி நடனத்தை துண்டுப் படமாகத் தயாரித்துக் கொண்டிருந்தனர். இந்தத் துண்டு படத்தில் இப்பொழுது சினிமா உலகில் பிரபலமாகி யிருக்கும் யோகம், மங்களம் டி. எ. ஜெயலக்ஷ்மி, ரஜனி, குமாரி கல்யாணி முதலியவர்களுடன் சரோஜவும் பங்கெடுத்துக்கொண்டுள்ளனர். ஆனல் என்ன காரணத்தாலோ இத் துண்டுப் படம் வெளியிடப்படவில்லை. பின்னர் சரோஜா (ரஜனி, டி. எ. ஜெயலக்ஷ்மி ஆகியவர்களோடு,"குபேர குசேலா"வில் நடனம் ஆடினர்.

"குபேர குசேலா"வுக்குப் பிறகு சரோஜா மீண்டும் ஜெமினியில் சேர்ந்தார். "மங்கம்மா சபத"த்தில் "டீ" கொடுக்கிறவர் இந்த சரோஜாதான். இந்தப் படம் முடித்த பின்னர் அவர் மீண்டும் ஜூபிடரில் சேர்ந்து "மஹா மாயா" படத்தில் போலோநாத், ரஜனி, எஸ். வரலக்ஷ்மி. உமா, ராஜேஸ்வரி ஆகியோருடன் கோஷ்டி நடனத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறர்.

அந்த சமயம் ஜூபிடரின் படங்களுக்கு பண்டித போலோநாத் சர்மா நாட்டிய டைரெக்டராய் இருந்து வந்தார். ஆக்ரா நகரைச் சேர்ந்த போலோநாத் கதக், மணிபுரி முதலிய நடனங்களில் வல்லமை உடையவர். பாம்பாட்டி நடனம் ஆடுவதில் "இணையற்றவர்" என்ற புகழ் பெற்றிருக்கிறர். அவர் சரோஜாவுக்குத் தமக்குத் தெரிந்த நாட்டியங்களை யெல்லாம் கற்றுக் கொடுத்தார். சரோஜாவும் குருவுக்கு மிகத் திருப்தி ஏற்படும் வகையில் அவைகளை அக்கறையுடன் கற்றுக் கொண்டு வந்தார்.

"மஹா மாயா" முடிந்ததும் போலோநாத் "பர்மா ராணி" படத்தின் நடனப் பகுதியை டைரெக்ட் செய்வதற்காக சேலத்திற்குச் சென்றர். சரோஜாவுக்கும் இந்தப் படத்தில் நடனம் ஆட சந்தர்ப்பம் கிடைத்தது. குடையை வைத்துக் கொண்டு அவர் பர்மிய நடனம் ஆடுவதை இப் படத்தில் காணலாம். இதன் பின் அவர் "ராஜ ராஜேஸ்வரி" படத்திலும் நடனம் ஆடியிருக்கிறர். இவ்வளவு படங்களில் அவர் நடனம் ஆடியிருந்த போதிலும், பட ரஸிகர்கள் அவரைக் குறிப்பாக கவனிக்கவோ, அல்லது அவருக்குத் தனிப்பட்ட புகழ் ஏற்படவோ இல்லை.

பல படங்களில் நடன குருவாக அமைந்ததின் விளைவாக போலோநாத்திற்கும் சரோஜாவுக்கும் இடையே காதல் தோன்றி, வளர்ந்து, கடைசியில் இருவரும் 1943-ம் வருஷத்தில் தம்பதிகளாகி விட்டனர். இப்பொழுது இவர்களுக்கு கலாராணி என்ற பெயருடைய இரண்டரை வயதான ஒரு பெண் குழந்தை உள்ளது.

சேலத்தில் "ராஜராஜேஸ்வரி" படம் முடிந்ததும் போலோநாத்தும் சரோஜாவும் "பாரத நடன கலா மந்திரம்" என்ற நடன கோஷ்டியை ஸ்தாபித்து சுற்றுப் பிரயாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். இதை அறிந்த கே. சுப்ரமண்யம் அவர்களை தம் "நர்த்தன முரளி" படத்திற்காக ஒப்பந்தம் செய்து கொண்டு சென்னைக்கு வரவழைத்தார். அதோடு நில்லாமல் ஸ்ரீ. சுப்ரமண்யம், ஸெயின்ட் மேரிஸ் ஹால், ஆர். ஆர். சபா, சுகுண விலாஸ சபா, வி.பி. ஹால் ஆகிய மேடைகளில் போலோநாத் - சரோஜா நாட்டியக் கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்தார். வி. பி. ஹாலில் நடந்த கச்சேரியில் பாம்பாட்டி நடனம் அதி அற்புதமாய் அமைந்து விட்டது. அதனல் சபையோரின் பிடிவாதமான வேண்டுகோளிற்கிணங்க அதே நடனத்தை இரண்டாம் முறையும் ஆடிக்காட்ட வேண்டியதாயிற்றும.

மேற் சொன்ன நான்கு கச்சேரிகளிலும் சரோஜா முகபாவங்களைத் தெளிவாக மின்னல் வேகத்தில் அள்ளி வீசியதைக் கண்ட சுப்ரமண்யத்திற்கு, சரோஜாவுக்கு படங்களில் பாத்திரம் கொடுத்து நடிக்கச் செய்தால் எளிதில் பிரபல நக்ஷத்திரமாகி விடுவார் என்பதை ஊகித்தார். அதற்கிணங்க தாம் தயாரித்து வந்த "விகடயோகி" படத்தில் கதாநாயகியின் வேஷத்தையே அவருக்குத் நேரியமாய் கொடுத்து



"தன அமராவதி"யில் சரோஜா எஸ் எம். குமரேசனுடன் திறமையாக நடித்திருக்கிருர்.

நடிக்கச் செய்தார், ஸ்ரீ. சுப்ரமண்யம் எதிர்பார்த்தது போலவே சரோஜா இப்படத்தின் மூலம் நல்ல பெயர் வாங்கிக் கொண்டார். சரோஜாவுக்கு அது முதல் அதிர்ஷ்ட காலம் ஆரம்பமாகி விட்டது என்று சொல்ல வேண்டும்.

"மதன காமராஜன்" காலத்திலிருந்தே சரோஜா மீது கண்வைத்திருந்த பி. எஸ். ராமய்யா தாம் தயாரிக்க முற்பட்ட "தனஅமராவதி"க்கு சரோஜாவை ஒப்பந்தம் செய்து கொண்டார். "தன அமராவதி"யில் சரோஜா தாம் ஒரு திறமையுள்ள நடிகை என்பதை நிரூபித்து விட்டார். ஆனல் அந்த சமயத்தில் அவருக்கு தொண்டை கம்மியிருந்ததால் பாட்டிற்கு இரவல் குரலைப் பெற வேண்டியதாகி விட்டதாம்.

சரோஜா கடைசியாக நடித்து முடித்துள்ள கே. சுப்ரமண்யத்தின் "விசித்திர வனிதா" இப்பொழுது சில வெளியூர்களில் வெளிவந்திருப்பதாகத் தெரிகிறது. இந்தப் படங்கள் மூன்றும் சரோஜாவை நக்ஷத்திரப் பதவிக்கு உயர்த்தி யுள்ளன. தற்போது அவர் "பாரிஜாதம்", "காளிதாஸா", "சுதர்சன்" ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிருர்.

சரோஜாவுக்குத் தம் தாய் பாஷையான தமிழைத் தவிர, மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, (கொஞ்சம்) கன்னடம், ஆங்கிலம் ஆகிய பாஷைகள் தெரியும். ஆதலால் "விகடயோகி"யில் நடித்துக் கொண்டிருந்த போது ஒரு தெலுங்குப் படத்தில் நடிப்பதற்காக வந்த கிராக்கியைத் தயங்காமல் ஒப்புக்கொண்டார். "பிரம்மரதம்" படத்தில் கதாநாயகியாகத் தோன்றும் சரோஜா இவரேதான்.

சரோஜா திருவனந்தபுரத்தில் வேளாளர் குலத்தில் 1929-ம் வருஷம் நவம்பர் மாஸம் 18உ பிறந்தவர் அவருடைய தகப்பனுர் இப்பொழுதும் திருவனந்தபுரத்தில் ஒரு ஹோட்டலை நடத்தி வருகிருர். சரோஜாவுக்கு ஒரு தங்கையும், இரண்டு தம்பிகளும் உள்ளனர். இந்த சிறு பையன்களிருவரும் கூட சரோஜாவின் கோஷ்டியில் நடனம் ஆடிவருகின்றனர்.

சரோஜாவின் தாயாரைப் பெற்ற பாட்டியின் ஊர் சேலம் ஆகும்.

ரோஜா குழந்தையா யிருந்த சமயம் அவருடைய பெற்றோர்கள் திருவனந்தபுரத்திலிருந்து சேலத்திற்குச் சென்று குடியேறினர். அவர்கள் சரோஜாவை மூன்று வயதுக் குழந்தையா யிருந்த போதே சேலம் கான்வென்ட் பள்ளியில் ஒப்படைத்து விட்டனர்.

ஒரு வருஷகாலம் சரோஜா இப்படிப் படித்த பின்னர் அவருடைய பெற்றோர்கள் சென்னைக்கு வந்து வசிக்கலாயினர். அதன் விளைவாக சரோஜா ராயபுரத்திலுள்ள செய்ன்ட் ஆன்டோனிஸ் கான்வென்ட்டில் சேர்க்கப்பட்டார். ஒன்பதாவது வயது வரையில் சரோஜா அந்த கான்வென்டிலேயே வசித்துப் படித்து வந்தார். அதன் பின்னர், சரோஜா தம் பெற்றோர்களுடன் வசித்தபடியே அந்தக் கான்வென்டிலேயே படித்து மூன்றாவது பாரத்தில் தேறினார். அத்துடன் அவர் படிப்பு முடிவுற்றது.

ஐந்தடி உயரமும், மாநிறமும் உடைய சரோஜா அசாத்திய தைரியமுடையவர். உயிருக்கே அபாயமான காரியங்களைக்கூட தைரியமாய் மேற்கொண்டு செய்வார் அவர். சர்க்கஸில் கற்றுக்கொண்ட கத்திச் சண்டையை பின்னர் ஸி. எஸ். டி. சிங்கினிடம் விருத்தி செய்து கொண்டு வல்லவி ஆகியிருக்கிறார். இப்பொழுது சரோஜா நீந்தப் பழகிக்கொள்கிறார். முன்பே சைக்கிள் விடத் தெரியும்; மோட்டார் வாங்கியதும் ஓட்டக் கற்றுக் கொள்ளப் போகிறாராம்.

சரோஜாவுக்கு சிறு வயது முதலே சங்கீதத்தில் மிகுந்த ஆசை உண்டு. ஆனால் அதை பிரமாதமாய் விருத்தி செய்து கொள்ளுவதற்கான வசதிகள் இல்லாமலிருந்தது. எனவே அவர் களக்காடு ராம நாராயணய்யரிடம் இசை சொல்லிக்கொள்ள முற்பட்டார். ஆனால் சில மாதங்களுக்குள்ளேயே ஸ்ரீ. ஐயர் "ராமதாஸ்" படத்தில் நடிக்க கல்கத்தா சென்று விட்டார், ஆகவே அவருடைய சிஷ்யையான கௌரி அம்மாளிடம் இப்பொழுது இசை சொல்லிக்கொண்டு வருகிறார்.

போலோநாத்தை அவர் மணந்து கொண்டிருப்பது அவர் வாழ்க்கையையும், கலா ஆர்வத்தையும் மிகப் பொலிவுறச் செய்திருக்றெது என்பது மிகையாகாது. சரோஜா பரத நாட்டியத்தையும் கற்றுக் கொண்டு விட எண்ணி முத்துசாமி நட்டுவனாரிடம் தற்போது அக்கலையைப் பயின்று கொண்டிருக்கிறார். இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் அரங்கேற்றல் வைபவத்தை நடத்துவார் போலிருக்கிறது.

சரோஜாவிடம் ஒரு சினிமா நடிகைக்கு இருக்க வேண்டிய பல அம்சங்கள் ஒருங்கே சேர்ந்துள்ளன. அதோடு எவ்வளவு தரமானாலும் சலியாமல் சரியாக வரும்வரை திரும்பத் திரும்ப நடித்து படத் தயாரிப்பாளர்களின் நன் மதிப்பைப்பெறும் வழக்கம் உடையவர் சரோஜா. அதனால்தான் வெகு சீக்கிரத்தில் அவர் ஒரு நக்ஷத்திரமாகி விட்டார் என்பதைக் குறிப்பிட வேண்டும். இந்த ரகஸியத்தை, புகழ்பெற விரும்பும் எல்லா சினிமா நடிக, நடிகைகளும் பின்பற்றுவார்களானால், அவர்கள் புகழும் பொருளும் அடையலாம் என்பதோடு, நம் படங்களின் நடிப்பு அம்சமும் வெகுவாக விருத்தி அடையும் என்பது நிச்சயம்.

நீங்கள் விரும்பும்
உயர்ந்தரக ஜவுளிகள்

யாவும் குறைந்த
விலையில் எம்மிடம்
கிடைக்கும்

★

வாசுகி
வஸ்திராலயம்

22, மேல சித்திரை வீதி,
மதுரை.

தற்போது பட உல
கில் மிகுந்த கிராக்கியுள்ள
நக்ஷத்திரமாக விளங்கும்
எம். வி. ராஜம்மா "கோகுல
தாஸி"யில் இவ்விதம் காக்ஷி
அளிக்கிறார்.

ஸிடேடல் பில்ம்ஸாரின் "ஞான
சௌந்தரி"யில் டி. ஆர். மஹாலிங்
கம் அதி இனிமையாய் பாடி சிறப்
பாக நடித்திருக்கிறாராம்.

குண்டூசியைக் கேளுங்கள்

ஆர். ராமசாமி (சேலம்)

ஏ. வி. எம். ஸ்டுடியோவின் விலாஸத்தைத் தெரிவிக்கவும். இந்த ஸ்டுடியோ சென்னைக்கு எப்பொழுது மாறப் போகிறது.

ஆம்; கூடிய சீக்கிரத்தில் மாறக்கூடும். விலாஸம் :— ஏ. வி, எம். ஸ்டுடியோ, தேவகோட்டை ரோடு.

“சூரியன்” (கண்டனூர்)

எஸ். பி. எல். தனலக்ஷ்மி, டி. ஆர். ராஜகுமாரியின் தயாரா?

பெற்றெடுத்த தாயார் அல்ல; சுற்றியிருந்து வளர்த்த சின்னம்மா (தாயாரின் சகோதரி) அவர்.

வி. ஷண்முகம் (ஆ. தெக்கூர்)

ஆயிரம் தலை வாங்கி அபூர்வ சிந்தாமணியில் சிந்தாமணி 999 தலைகளைத்தானே வாங்கினாள். “ஆயிரம் தலை வாங்கி” என்று அவளைச் சொல்லுவது தவறல்லவா?

தவறுதான். ஆனால் இப்பொழுதே அவர்கள் விளம்பரங்களில் இப்படத்தின் பெயரை எழுதுவதற்கு மிக சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க, அவர்கள் “தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது தலை வாங்கி அபூர்வ சிந்தாமணி” என்று எழுதுவதானால் என்ன பாடுபட வேண்டியிருக்கும்!

கே. ஜி. ராமநாதன் (மதுரை)

மதன மாலாவில் நடிக்கும் ரஜினியின் சொந்த ஊர் எது? அவருடைய சொந்தப் பெயர் என்ன? இதற்குமுன் தமிழ்ப் படங்களில் நடித்திருக்கிறாரா? ரத்தன் ஹிந்திப் படத்தில்நடிக்கும் ஸ்வர்ணமாலா மாதிரி இருக்கிறதே அவரைப் பார்த்தால் அவரேதானா?

இல்லை. டி. ஆர், ரஜினியின் அசல் பெயர் ராஜபாலா. பக்த அருணகிரி கிருஷ்ண குமார், சுமதி, போதனா, பால நாகம்மா, மாயா லோகம், விஸ்வாமித்திரா ஆகிய படங்களில் அவர் முன்பே தோன்றியிருக்கிறார். சொந்த ஊர் புதுக்கோட்டை.

எம். என். முத்து (கோபிசெட்டிபாளையம்)

சினிமா நடிகைகளில் பெரும்பாலோர் ‘வாழ்க்கைப் பாதையினின்றும் வழுக்கி விழுந்த வகையருக்கள்’ என்பது என் அபிப்பிராயம். நீர் என்ன சொல்லுகிறீர்?

நீர் சொல்வது உண்மையாயிருக்கலாம். சினிமா நடிகைகளில் சிலர் நடிப்புப் பாதையிலிருந்து வழுக்கி வாழ்க்கையில் விழுந்து விடுகிறார்களே, இதற்கு நீர் என்ன சொல்லுகிறீர்?

பி. வேலுசாமி (ஆண்டிப்பட்டி)

என். எஸ். கிருஷ்ணன் தற்போது எந்தெந்தப் படங்களில் நடித்து வருகிறார்? ஜெயிலிலிருந்து வெளி வந்த பின் எந்தெந்தப் படங்களில் நடித்திருக்கிறார்?

ஜெயில் வாசத்திற்குப் பிறகு “பைத்தியக்காரன்”, “கன்னிகா”, “விஸ்வாமித்ரா”, “தேவதாஸி” ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். “சந்திரலேகா” விலும் தம் சொந்தப் படமான “நல்ல

வெளியூர்களில் இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கும் "இது நிஜமா" படத்தில் பாலசந்தரும், சரோஜினியும்.

தம்பி"யிலும் நடித்துக் கொண்டிருக்கிறார்.

என். சுடலைமுத்து (கொழும்பு)

ஏ. சகுந்தலா படங்களில் நடிப்பதை நிறுத்திவிட்டதேன்?

தம் கணவர் சின்னப்பா ஏராளமாய் நடித்துக் கொண்டிருக்கும் போது தாமும் எதற்காக நடிக்க வேண்டுமென்ற எண்ணம் போலும்!

பாலு (சூளை)

என்னிடம் நிறைய செல்வம் இருக்கிறது. ஆகையால் என்னை குமாரி கமலா மணந்து கொள்ளுவாளா?

உம்மிடம் செல்வம் மட்டுமா இருக்கிறது? அதற்குரியதான திமிர்கூட இருக்கிறதே! கலியாணத் தரகர் வேலையையும் நான் செய்துவருவதாக நீர் நினைத்தது தவறு.

நம் பட முதலாளிகள் பழைய கதைகளையே மறுபடியும் படமாகத் தயாரிப்பதின் காரணம் என்ன?

அப்பழைய கதைகளைப் புதுப்பிக்கும் நோக்கமாயிருக்கலாம்.

டி. ஆர். ராமச்சந்திரன் (உதகமண்டலம்)

யோகம், மங்களம் சகோதரிகளின் விலாஸம் என்ன? தற்போது எந்தெந்தப் படங்களில் நடித்து வருகின்றனர்?

தற்போது மங்களம் மட்டும் "வேதாள உலகம்", "சுதர்சன்" ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். விலாஸம்:—12, பைக்ராப்ட்ஸ் முதல் தெரு, ராயப்பேட்டை, சென்னை.

எம். வி. தங்கமுத்து (கொழும்பு)

யூ. ஆர். ஜீவரத்தினத்தின் நிரந்தர விலாஸத்தைக் கட்டாயம் தெரிவிக்கவும்.

ஊஞ்சலூர், 'ஈரோடு மார்க்கம்' என்று அவருடைய பெயருடன் சேர்த்துக் கொள்ளும்.

ஜி. ஆர். சுந்தர் (பொறையார்)

எம். ஜி. சக்ரபாணியும், எம். ஜி. ராமச்சந்திரனும் சகோதரர்களா?

ஆம்; சகோதரர்கள்தாம்.

மா. அநுமந்த ரரவ் (வேலூர்)

கன்னிகாவில் டி. ஈ. வரதன் எம். எஸ். சரோஜினியைத் தொடுவதற்கு ஏன் அவ்வளவு பயப்படுகிறார்?

இது முதல் படம். இன்னுமிரண்டு படங்களில் நடித்து விட்டால் பின்னர் அவருக்கு தொடுவதற்கான சந்தர்ப்பங்களை விடுவதற்கு மனம் வராது!

நடராஜன் (கொழும்பு)

சினிமா நடிகைகள் காலாகாலத்தில் தக்க கணவனை மணந்து சினிமாவில் நடித்தால் அவர்களுடைய கற்புக்கு பங்கம் வராதல்லவா?

காலாகாலத்தில் கணவனைப் பெற்ற பலர் சினிமாவுக்கு வந்து தங்கள் கற்பை இழந்துள்ளார்களே; அதற்கென்ன சொல்லுகிறீர்?

எஸ். சதானந்தம் (யாழ்ப்பாணம்)

நாம் இருவர், ராஜகுமாரி, ஸ்ரீவள்ளி, ஜகதலப்ரதாபன, கன்னிகா ஆகிய படங்களை சிறப்பிற்

கேற்றபடி வரிசைக் கிரமமாய் கூறவும்.

"நாம் இருவர், ஜகதலப்ரதாபன், ஸ்ரீ வள்ளி, கன்னிகா, ராஜகுமாரி."

பி. எஸ். விஸ்வநாதன் மருதானே, (இலங்கை)

எனக்கு சினிமாவில் சேர்ந்து நடிப்பதற்குப் பிரியம். ஆகையால் சினிமாவில் சேருவதற்கான முறைகளைத் தெரிவிக்கவும்.

முறைகேடு மிகுந்த சினிமாத் தொழிலில் ஈடுபடுவதற்கான முறைகளை நீர் கேட்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. நீர் பிரியம் கொண்டுள்ளபடி ஒரு நடிகராக வேண்டுமானல் இத் தொழிலிலுள்ள யாருடைய பிரியமாவது உமக்கு முதலில் ஏற்பட வேண்டும்.

இ. எம்மானுவேல் (வடக்கன்குளம்)

அர்த்தமற்ற ஆபாச புராணப் படங்களை எடுப்பதை விடுத்து, படமுதலாளிகள் வாழ்விற்கு வளம் செய்யும் படங்களை எப்பொழுது தயாரிப்பார்கள்? நீராவது அவர்களுக்கு யோசனை சொல்லக்கூடாதா?

நாசமாய்ப் போயிற்று! சென்ற பன்னிரண்டு வருஷகாலமாக நான் வேறு என்ன தான் செய்து வருவதாக நீர் நினைத்திருக்கிறீர்? நீர் கூறுவது போல் புராணங்கள் அர்த்தமற்றவையோ-ஆபாசமானவையோ அல்ல. முதலாளிகள் தாம் அவைகளை அர்த்தமற்ற முறையிலும் ஆபாசமானதாகவும் தயாரிக்கிருர்கள். ராம்ராஜ்யா, பரத் மிலாப் போன்று தயாரிப்பதாயிருந்தால் நம் பட முதலாளிகள் புராணப் படங்களையே தயாரித்துக் கொண்டிருக்கட்டும் என்று சொல்லிவிடுவேன்.

ஜூபிடரின் "விஜயகுமாரி"ல் தோன்றும் எம். எஸ். எஸ். பாக்கியம்.

ஜூபிடரின் "அபிமன்யு"வில் கிருஷ்ணனாக நடிக்கும் நரசிம்மபாரதி

கே. எஸ். சுப்ரமணியம் (செங்கற்பட்டு)

தவமணிதேவி, பக்தகாளத்தி படத்தில் ஒரு பக்கம் மார்பைத் திறந்தபடியே ஏன் நடிக்கிருர்?

இது அவருடைய குற்றமாயிராது. அந்தப் பட முதலாளியின் சங்கோஜம் காரணமாக இப்படி ஒரு பக்கம் மட்டும்

மார்பை மூடிக்கொண்டு நடிக்க வேண்டியதாகி யிருக்கும் !

ஏ. ஆர். கிருஷ்ணன் (சென்னை)

நான் ஒரு சினிமா நடிகையை விவாஹம் செய்துகொள்ள ஆவலாய் இருக்கிறேன். இதற்கு ஒரு வழி சொல்லும்.

'நகர' வாழ்க்கையிலுள்ள நீர் சறுக்கி 'நரக' வாழ்க்கையை எதற்காக அடைய விரும்புகிறீர் !

வி. நடராஜன் (தென்காசி)

தற்போது பிடிக்கப்படும் படங்களெல்லாம் தேசியப் போர்வையுடன் வெளிவரும் மர்மம் என்னவோ ?

ஜனங்களுக்கு இப்பொழுது சுதந்திர ஜுரம் அதிகமாயிருப்பதை நீரும் தான் அறிவீரே !

டி. கே. ஆர். சந்திரா (தென்காசி)

வழுவூர் ராமையா பிள்ளை அவர்களின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

"மின்மினி" படத்தில் கனஜோராய் நடிக்கும் இன்ஸ்பெக்டர் கே. எஸ். குமார்.

விலாஸம் ;—வடகூர் செல்வ விநாயகர் கோயில்தெரு, மைலாப்பூர், சென்னை.

"சினிமா நாதன்" (காஞ்சிபுரம்)

எம். ஆர். சந்தானலக்ஷ்மி கன்னிகாவில் கிழவியாக நடிக்கக் காரணமென்ன ?

அவரைக் குமரியாக மேக்கப் செய்வதைவிட கிழவியாக மேக்கப் செய்வது தானே சுலபம்.

பிழைக்கும் வழியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

பல வருஷ தடுமாற்றத்திற்குப் பிறகு கடைசியில் துரைராஜ் "பிழைக்கும் வழி"யில் ஈடுபட்டிருக்கிறார் என்பது தெரிந்த விஷயம்தானே !

எஸ். பதி (மேட்டுப்பாளையம்)

மதனமாலாவில் டி. ஆர். ரஜினி பாடுவது சொந்தக் குரலிலா ?

இல்லை.

எஸ். ராதாகிருஷ்ணன் (திண்டுக்கல்)

குமாரி ருக்மணிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? இல்லையா ? யாரை மணம் செய்து கொள்ள நினைத்திருக்கிறார் ?

கிருஷ்ண பரமாத்மாவே ! நீர் ருக்மணி விஷயத்தில் மிகுந்த அக்கரை கொண்டிருப்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல ! ஆனால் என்னவோ அந்த விஷயத்தைக் கவனிக்க அவருடைய தயார் இருக்கிறார்.

"முரளிதரன்" (அரக்கோணம்)

நான்......யை மணந்து கொள்ள விரும்புகிறேன். தங்கள் விருப்பமென்ன ?

ஐய்யய்யோ எனக்கு அந்த மாதிரி விருப்பம் கிடையவே கிடையாது !

கே. ஷேக் ஆதம் (திருவள்ளூர்)

நாகய்யா நடித்த போதனா, வேமனா, தியாகய்யா ஆகிய படங்களில் எது சிறந்தது ?

"போதனா"தான்.

டி. ஆர். ராமச்சந்திரன் (உதகமண்டலம்)

என். எஸ். கிருஷ்ணனின் தாய் பாஷை எது? வேறு என்ன பாஷைகள் தெரியும்.

அவரது தாய் பாஷை தமிழ்; மலையாளம், தெலுங்கு ஆகிய பாஷைகளும் அவருக்குத் தெரியும்.

என். எஸ். பொன்னுதுரை (யாழ்ப்பாணம்)

"குண்டூசி என் இதயத்தில் இடம் பெற்றிருக்கிறது" என்றார் என் நண்பரொருவர்.

வாடகைக்கு அவர் 'பில்' அனுப்பாத வரையில் அந்த இடத்தைக் காலி செய்வதாக எனக்கு உத்தேசமில்லை என்று அவரிடம் தெரிவியும்!

ஜி. நரசிங்கபாபு (திருவள்ளூர்)

எம். எம். தண்டபாணி தேசிகர் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

அவர் "திருமழிசை ஆழ்வார்", "சிவயோகி" ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். இரண்டு படங்களும் முக்கால் பாகம் முடிந்து விட்டனவாம்.

எஸ். ஜி. எஸ். ரத்தினம் (சத்தியமங்கலம்)

குமரகுரு, தாய் நாடு ஆகியவை தவிர சித்ரகலா மூவிடோன் தயாரித்த இன்னொரு படம் எது?

"முறிந்த வாக்கு" என்ற சிங்களப் படம் ஆகும்.

வரசு (கள்ளக்குறிச்சி)

எனது நண்பரொருவர் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் பண்ணியிருக்கிறார். அவருக்கு ஒரு சினிமா டெக்னிஷ்யனாக விருப்பம். ஆதலால் எந்த ஸ்டுடியோவில் சேர்ந்து வேலை பழகலாம்?

தம் டெக்னிஷ்யன்களில் பெரும்பாலோருக்கு தங்கள் தொழிலைப் பற்றிய படிப்பு ஞானம் கிடையாது. மணியக்காரன் மகன் மணியக்காரன் என்பது போல சில விஷயங்களைச் செய்து வருவது தான் அவர்களுக்குத் தெரிந்த 'டெக்னிக்.' இவர்களிடம் உம் நண்பர் கற்றுக்கொள்ளக் கூடியது அதிகமிராது. சர்க்கார் தொழில் கல்விக் கழகத்தில் உம் நண்பர் சேர்ந்து படிக்கலாம். ஆனால், புஸ்தகப் படிப்பால் மட்டுமே ஒருவர் டெக்னிஷ்யனாகி விட முடியாது என்பதையும் உம் நண்பர் மறந்துவிடக் கூடாது.

நாட்டிய உலகில் விரைவில் முன்னேறி வரும் குமாரி தங்கமணி சீக்கிரமே ஒரு சினிமாப் படத்தில் தோன்றப்போகிறாள்.

ஜே. மார்க் (பங்களூர்)

என். ஸி. வஸந்தகோகிலம் நடித்த முதல் படம் எது? தற்போது எந்தப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்?

வஸந்தகோகிலம் நடித்த முதல் படம் "சந்திரகுப்த சாணக்கியா", தற்போது ஜூபிடரின் "கிருஷ்ண விஜய"த்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

கே. ஸி. கே. (கும்பகோணம்)

வஸந்தகோகிலத்திற்கு விவாஹம் ஆகிவிட்டதா!

ஆகிவிட்டது; 'சாட்சி' கூட இருக்கிறது!

டி. கே. எஸ். இஸ்மத் (மன்னார்)

விகடயோகியில் நடிக்கும் சின்னப்பா சிகரெட் பிடிக்க எப்பொழுது கற்றுக் கொண்டார்?

பட முதலாளிகள் தாராள மனதுடன் அந்தச் செலவையும் ஏற்றுக்கொள்ள முற்பட்ட சமயத்தில்!

எஸ். எஸ். மரைக்கார் (பண்டாரவளை)

"லக்ஸ்", சோப்புக் கம்பெனியார் அழகிய சினிமா நக்ஷத்திரங்களின் முகங்களைப் போட்டு விளம்பரம் செய்கிறார்களே. பி. ஏ. பெரியநாயகியின் படத்தையும் போட்டு ஏன் விளம்பரம் செய்யக்கூடாது?

தாராளமாய்ச் செய்யலாம். ஆனால் பெரியநாயகியின் படத்தின் கீழ் (விளம்பரத்தில்) "எங்கள் சோப்பை உபயோகிக்காத நக்ஷத்திரம்" என்று எழுதிவிட வேண்டும்!

கே. வி. கே. ஜான் (மன்னார்)

பொன்னுருவியில் நடித்த கே. டி. ருக்மணி தற்போது ஏதேனும் படங்களில் நடிக்கிறாரா?

பல வருஷங்கள் கஷ்டப்பட்டு அவர் சம்பாதித்துக் கொண்டிருந்த கொஞ்சம் பெயரையும் இப்படம் உருவிக் கொண்டு போய்விட்டது.

சம்பந்தம் (கும்பகோணம்)

ஸ்ரீநிவாஸ ராவ் தற்போது டைரெக்ட் செய்யும் படம் எது?

இன்னமும் தீர்மானம் ஆகவில்லை.

மிஸ். திருமலை (பத்தமடை)

எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஹிந்தி மீராவில் நடித்து அகில இந்தியப் புகழ் பெற்றது போல இதர நடிகைகளும் ஏன் பெறக்கூடாது!

அவர்கள் நடிக்கத் தயார். ஆனால் கூப்பிடுகிறவர்கள் தானில்லை.

எஸ். எஸ். பெருமாள் (சேலம்)

தேவகன்யாவில் நடித்த வி. என். ஜானகியும், சித்ரபகாவலியில் நடிக்கும் சித்ரலேகாவும் ஒரே நடிகை போலத் தோன்றுகிறதே. இருவரும் ஒருவர்தானா?

ஒருவரேதான். அந்தப் படத்திற்கு ஏற்பட்ட தோல்வியைப் பார்க்கும் போது, ஜானகி தம் பெயருக்கு பங்கம் வரக்கூடாதென்ற எண்ணத்தாலேயே பெயரை மாற்றி வைத்துக் கொண்டாரோ என்று தோன்றுகிறது

ஏ. முகமது மொய்தீன் (பாலக்காடு)

தமிழ்ப் பத்திரிகைகளில் தமிழ் நடிக நடிகைகளைப் பற்றியே வாழ்க்கை வர்ணனை எழுதுகிறார்கள். வட இந்திய நக்ஷத்திரங்களைப் பற்றி ஏன் எழுதுவதில்லை?

நான்கைந்து வருஷங்களுக்கு முன் வரையில் எந்தத் தமிழ் சினிமா பத்திரிகையைத் திருப்பினாலும், வட இந்தியப் படச் செய்திகள், விமர்சனங்கள் முதலியவைகளே நிரம்பியிருக்கும். வெட்ககரமான இந்த வழக்கத்தை எதிர்த்து மாற்றியது குற்றமானால் அதற்கான பொறுப்பில் ஒரு பங்கை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். வட இந்திய நக்ஷத்திரங்களைப் பற்றித் தெரிய வேண்டுமானால்



"அபிமன்யு" தமிழ்ப் படத்தில் குமரேசன் இப்படிக் குறி பார்க்கிறார்.

"ஞானசௌந்தரி"யில் பிலேந்திரனின் தகப்பனராக வி. வி. நாயகம் திறம்பட நடித்திருக்கிருராம்.

நீர் வட இந்தியப் பத்திரிகைகளை வரவழைத்துப் படியுமே.

பி. எஸ். அப்துல் வஹாப் (திருக்கழுக்குன்றம்)

டி. ஆர். மஹாலிங்கம் பாடுவதெல்லாம் சொந்தக் குரலிலேயேதானு?

ஆம், சொந்தக் குரலில் தான். ஆனல் சில விஷமிகள் வேறுவிதமாகப் பிரசாரம் செய்து வருகிருர்கள்.

எம். வி. வீரப்பன் (திருச்சி)

"எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் புதல்வி ராதா" என்று "கல்கி"யில் வெளியிட்டிருந்தார்களே இச் செய்தி உண்மைதானு?

முற்றிலும் உண்மை தான். எம். எஸ். சுப்புலக்ஷ்மி ராதாவின் சிற்றன்னை.

ஆர். கே. பன்னீர்செல்வம் (மத்தூர்)

ருக்மாங்கதனில் நடிக்கும் ஹாஸ்ய நடிகர் என். எஸ். கிருஷ்ணனின் சகோதரரா?

உடன் பிறந்த சகோதரரல்ல. ஆனல் தோற்றத்திலும், நடிப்பிலும் அப்படிச் சொல்லலாம்.

நா. சு. மே. சுப்பையா (கொழும்பு

நீங்கள் சினிமாப் படங்களைப் பற்றியும், நக்ஷத்திரங்களைப் பற்றியும் குற்றம் குறைகளை எடுத்துக் காட்டி வருகிறீர்களே, இதனல் ஏதேனும் நன்மை ஏற்பட்டிருக்கிறதா?

ஏற்படாமலென்ன? பத்து வருஷங்களுக்கு முன் ரஸிகர்களுக்கிருந்த கலாரஸனை இப்பொழுது பன்மடங்காய் விருத்தியடைந்திருக்கிற தென்பதை நீர் கவனியும்.

கதிர்வேலு (முல்லைத்தீவு)

வீரவனிதாவில் நடிக்கும் ஆர். பி. லக்ஷ்மிதேவிக்கு ஆங்கிலம் தெயுமா?

தெரியும்.

இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டு:—உங்கள் பெயர்?

சினிமா நக்ஷத்திரம்:—மோஹன குமாரி.

ஏஜண்டு:—வயது?

நக்ஷத்திரம்:—பதினேழு.

ஏஜண்டு:—உங்கள் சினிமா வயதைக் கேட்கவில்லை: உண்மை வயதைக் கேட்கிறேன்!

போட்டி வெற்றி சுலபம்

போட்டி
கே. 54

ரூ. 25,000
* நிகரம் சேர்ந்தால்

5 பரிசுகள், ரூ. 10000, 6000, 4000, 3000, 2000.

இந்தக் கட்டத்தில் 6 முதல் 21 வரையிலுள்ள எண்களை இடமிருந்து வலமும், மேலிருந்து கீழும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 54 வரும்படி அமைக்கவும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கலாம்.

முந்திய விடை
ஜே. 50

7	9	16	18
10	20	5	15
14	8	17	11
19	13	12	6

மதராஸ் ரிலயன்ஸ் பாங்கில் சீல் செய்து டிபாஸிட்டில் வைத்துள்ள விடைக்கு எண்ணுக்கு எண் கட்டத்திற்கு கட்டம் சரியான விடைக்கு முதற் பரிசும், முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு 2-ம் பரிசும், முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு 3-ம் பரிசும், முதல் இரண்டு எண் சரியான விடைக்கு 4-ம் பரிசும், முதல் எண் மாத்திரம் சரியான விடைக்கு 5-ம் பரிசும் அளிக்கப்படும். I, II பரிசுதாரர்களுக்கு 25-4-48 ல் தந்தி யடிக்கப்படும் எல்லோருக்கும் பரிசு ஜாபிதா அனுப்பப்படும்.

உங்கள் விடைகளை 10-4-48 க்குள் தபாலில் போடவேண்டும்.

18-4-48 ல் பத்திரிகைகளில் சரியான விடை பிரசுரிக்கப்படும்.

பிரவேசக் கட்டணம்: 1 விடைக்கு ரூ. 1-0-0, 6 க்கு ரூ. 5-0-0 மாத்திரம். எத்தனை விடைகள் வேண்டுமானாலும் சாதாரண காகிதத்தில் தயாரித்து ஷை கட்டணத்துடன் அனுப்பவும். பரிசு ஜாபிதாவுக்காக உங்கள் அட்ரஸ் எழுதிய கவர் ஒன்று வைக்கவும். ஷை கட்டணத்தொகையை போஸ்டல் ஆர்டர் அல்லது மணியார்டர் மூலமாக அனுப்பவும். உங்கள் அட்ரஸை M. O. கூபனிலும், கவரிலும் தவறாமல் குறிக்கவும்.

* நிகர வசூல் ரூ. 25,000 க்குக் குறைந்தால் பரிசுகளின் தொகையும் அதற்கேற்றாற்போல் குறைத்து பகிர்ந்து அளிக்கப்படும். எல்லா விஷயங்களுக்கும் எங்கள் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். மற்ற விதிகள் வழக்கம்போல். எங்கள் அட்ரஸ்:—

லக் & கோ.,

Govt. Rgd. Firm 1564.

43/23, ஈஸ்வரன் தெரு :: மதராஸ் 17.

செய்திப் படங்கள்

ஜூபிடருக்கு நிறைய பணத்தை வாரிக் கொடுத்து வரும்
“ராஜகுமாரி” படத்தில் கே. மாலதி

ஆண்டாளாகத் தோன்றும்

ஜீவரத்தினத்தை

அடையாளம் தெரிகிறதா ?



"மின்மினி"யில்
கதாநாயகனை நடிக்கும்
விஜயகுமார்



"சிவயோகி

தாஸி

"கோகுலதார

ர

நவீனஜ

கடைக்

யே

(ம

காதலக்

வரு

தோழிய

ஜெ

(பிக்

யை மயக்கிய
சுரபி)

*

யில், நடிக்கும்
ம்மா

*

பக்க அந்தக்
பார்வை
தா ?
மினி)

காணத
த்தைத்
தேருதல்
மா ?
னன்)

"பிழைக்கும் வழி"யில்
பாலய்யாவுக்கு
புதிய புகழ் கிடைக்குமாம்

"இது நிஜமா"வில நடிக்கும்
சரோஜினி
நிஜமாகவே புதிய நடிகை



பக்தர்களின் பாத்திரங்களை நடிப்பதில் இணையற்றவரான நாகய்யா
"பக்த ஜனா" தமிழ்ப் படத்தில் இப்படித் தோன்றுகிறார்

நுணிப்புல்

வெட்டுக்கிளி

சினிமா உலகில் ஒரே பெயர் பல நபர்களுக்கு இருப்பதால் ரசிகர்களுக்கு மட்டுமின்றி மற்றெல்லோருக்குமே சந்தேகங்கள் ஏற்பட்டு வருகிறது. பெயர் மட்டும் ஒன்றாயிருந்து முதலெழுத்துக்கள் (இனிஷியல்கள், வேறாக இருந்தாலாவது ஒருவேளை புரிந்து கொள்வது சாத்யமாயிருக்கும். ஆனால் சில பெயர்களும் சில இனிஷியல்களும் கூட சில சமயங்களில் ஒன்றாக இருந்து விடுகின்றன. அப்படியிருப்பதால் அது மிகவும் சிக்கலான பிரச்னையாகிவிடுகிறது.

* * *

இது மாதிரி குழப்பத்திலிருந்து தப்பிப்பதற்கு ஒரு உபாயம் செய்யலாம். அதாவது சம்பந்தப் பட்டவர்களின் உடல் அளவைக் கொண்டு ஒருவாறு சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்ளலாம். சில சமயங்களில் படங்களின் பெயர்களைக் கொண்டும் புரிந்து கொள்ளலாம். சிலர் தெலுங்கு நடிகராகவோ, நடிகையாகவோ இருக்கலாம். இதைக் கொண்டும் ஒருவாறு சந்தேக நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

* * *

ஆனால் ஒரே தெலுங்கு நக்ஷத்திரம் தமிழ்ப் படத்திலும் நடிக்கும் போதோ குழப்பம் உச்ச நிலையை அடையவே செய்யும். உதாரணமாக, வரலக்ஷ்மி என்ற பெயரை எடுத்துக் கொண்டால் ரஸிகர்களிடையே பின் கண்டவாறு சர்ச்சை நடக்கும் :—

ஒருவர் :—"எந்த வரலக்ஷ்மி ?" என்று முதலில் கேட்பார்.

இன்னொருவர் :—"இவர் வேறே" என்று பதில் அளிப்பார்.

"வேறே என்றால் யார் இவர் ?"

"இவர் ஒரு புதிய முகம்."

மீண்டும் சில நாட்களுக்குப் பிறகு இவர்களிடையே இதே சர்ச்சை ஆரம்பமாகும் :--

"இந்தப் படத்தில் நடிக்கும் வரலக்ஷ்மி யார் ?"

"இவரா ? முன்பு தெலுங்குப் படங்களில் நடித்தாரே அவர்தான்."

மறுநாள் வெளியாகும் ஒரு தெலுங்குப் பட விளம்பரத்தில் இதே பெயர் காணப்படும். முந்தின சந்தர்ப்பங்களில் கேள்விகளுக்குப் பதில் அளித்தவருக்கே சந்தேகம் ஏற்பட்டுவிடும் ! "முன்பு தெலுங்குப் படத்தில் நடித்த வரலக்ஷ்மியா ? அல்லது தெலுங்கு தமிழ்ப் படங்களில் தற்போது நடிக்கும் வரலக்ஷ்மியா ?" என்று மூளையைக் குழப்பிக் கொள்ளுவார் !

* * *

டைரெக்டர்கள் சம்பந்தமான ஒரு பெயரோ பல வருஷங்களாகியுக் குழப்பத்தை உண்டு பண்ணிக் கொண்டேயிருக்கிறது. "ஆர். எஸ். மணி" என்ற பெயருடைய இரு டைரெக்டர்கள் இருக்கிறார்கள். கண்ணகி புகழ் ஆர். எஸ். மணி

ஒருவர். இன்னெருவரோ பாமா பில்ம்ஸ் டைரெக்டர் ஆர். எஸ். மணி. இவர்களைப் பற்றிய பெயர்க் குழப்பம் சினிமா ஆசிரியர்களுக்கே ஏற்பட்டிருக்கிற தென்றால் ரஸிகர்களைப் பற்றிக் கேட்பானேன்?

* * *

நல்ல வேளையாக என். எஸ். கிருஷ்ணனுக்கு ஒரு "டுப்ளிகேட்" இதுவரைத் தோன்றவில்லை. ஆனல் மதுரம் என்ற பெயருக்கோ போட்டி ஏற்பட்டிருக்கிறது. டி. ஏ. மதுரத்தின் பெயர்தான் எல்லோருக்கும் தெரியுமே. அதற்கு முன்பே சிந்தாமணியில் எஸ். பி. மதுரம் என்று ஒருவர் தோன்றியிருக்கிருர். இதற்குப் பின்னரோ ரம்பையின் காதலில் டி. கே. மதுரம் என்ற ஒரு பாட்டியம்மா தோன்றி யிருக்கிருர். இப்பொழுதோ சம்ஸார நௌகா பட விளம்பரத்தைப் பார்ப்பவர்கள் "இவர் எந்த மதுரம்?" என்று கேட்கிருர்கள். இவர் ரம்பையின் காதல், பால்ய விவாஹம் முதலிய படங்களில் நடித்த அதே பாட்டியம்மா தான் என்று விளக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

* * *

முன்பு வெகு நாட்கள் வரை, "எம். எஸ். சரோஜாவும், எம். எஸ். சரோஜினியும் ஒருவர்தானு?" என்ற கேள்வியை கேள்விகளுக்குப் பதிலளிக்கும் ஆசிரியர்களிடம் கேட்டு அவர்களைத் துளைத் தெடுத்திருக்கிருர்கள் ரஸிகர்கள். கொஞ்ச காலத்திற்குப் பிறகு இந்த சர்ச்சை தீர்ந்தது.

கடைசியில், "சரோஜா வேறு, சரோஜினி வேறு" என்ற விஷயத்தைப் புரிந்து கொண்டார்கள், இப்பொழுதோ "இது நிஜமா" படத்தில் மீண்டும் ஒரு சரோஜினி தோன்றுகிருர். எனவே. நேயர்களுக்கு இனி "அடிஷனல்" சந்தேகம் ஏற்படக் கூடும்!

* * *

சினிமா ஆசிரியர்களுக்கும் ரஸிகர்களுக்கும் மட்டும்தான் இதுபோன்ற சந்தேகம் ஏற்படுவதாக நினைக்க வேண்டாம். விளம்பரங்களேயும், பானர்களையும் தயாரிப்பவர்கள் கூட சில சமயங்கள் கேலிக்கிடமாகி யிருக்கிருர்கள்.

* * *

ஒரு தடவை லவங்கி பட விளம்பரத்தில் பி. ஆர். பந்துலுவின் பெயருக்குப் பதில் ஸி. வி. வி. பந்துலுவின் பெயர் கொட்டை எழுத்துக்களில் போடப்பட்டிருந்தது!

* * *

தற்போது அநேகருக்கு மிகுந்த குழப்பத்தை உண்டுபண்ணி வருவது பேசா மடந்தை பட விளம்பரம். அப்படத்தில் நடிப்பதாகச் சொல்லப்படும் எம். எஸ். சுப்புலக்ஷ்மி, கோகிலகான எம். எஸ். சுப்புலக்ஷ்மி அல்ல என்பது விஷயம் தெரிந்தவர்களுக்கு மட்டுமே தெரியும்.

* * *

சமீப காலமாக புஷ்பவல்லீ; மாலதி, பானுமதி போன்ற பெயர்களெல்லாம் வெகுவாக சதி செய்து வருகின்றன.

* * *

பெயர்த் தடுமாற்றங்களினல் ஏற்படும் விபரீதங்களேயும், விநோதங்களேயும் இன்னும் எவ்வளவு வேண்டுமானலும் விஸ்தரித்துக் கொண்டே போகலாம். ஆனல் எனக்குத்தான் பயம்: "நானே எங்கேயாவது தவறி விடுவேனே" என்று!

* * *

"ஜலந்தருக்கு சர்தார் படேல் விஜயம்" என்ற செய்தித் தாளைப் படித்ததும் நான்கூடத்தான் ஏமாந்து விட்டேன். "துளஸி ஜலந்தர் படத்திற்குத்தான் சர்தார்ஜி விஜயம் செய்திருக்கிருர் போலும்" என்று அச்செய்தியை பரபரப்புடன் மேலே படித்தேன். ஆனல், என்ன ஆசச்

ரியம்! ஜலந்தர் என்ற நகரத்திற்கு சர்தார்ஜி விஜயம் செய்தது பற்றிய செய்தியாக இருந்தது அது!

* * *

இதே மாதிரி பத்திரிகை, சங்கீத, சினிமா வட்டாரங்களில் தெரிந்த நபர்களாக உள்ளவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டால் உடனே "அவரா? இவரா?" என்று கேட்பார்கள்.

* * *

உதாரணமாக, "மஹாதேவன் சொன்னார்" என்றால் "ஆனந்த விகடன் மஹாதேவனா? அல்லது நாகர் கோயில் மஹாதேவனா?" என்று கேட்பார்கள். இதே மாதிரிதான், "நாரதர் ஸ்ரீனிவாஸராவா? பி. எஸ். ஸ்ரீனிவாஸராவா?" என்றும், "ஹிந்துஸ்தான் நாராயணய்யங்காரா? கோட்டு வாத்யம் நாராயணய்யங்காரா?" என்றும், "பி. எஸ். கோவிந்தனா அல்லது ப்ரீ இந்தியா கோவிந்தனா" என்றும் கேட்பது சகஜமாக இருக்கிறது.

* * *

இதனுடன் "குண்டூசி"யையும் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. கடைக்குப் போய் ஒருவர் "குண்டூசி இருக்கிறதா?" என்று கேட்டால், "குத்துகிற குண்டூசியா? படிக்கிற குண்டூசியா?" என்று கடைக்காரர்கள் கேட்பது சகஜமாயிருக்கிறதாம்!

* * *

சோப்பு, காபி, டீ இவைகளைத்தான் நம் சினிமா நக்ஷத்திரங்கள் உபயோகிப்பதாகக் கூறுகிறார்கள் என்று நினைத்திருந்தேன். சமீபத்தில் இவர்களில் சிலர் தாங்கள் வாசனைத் தைலங்களை உபயோகிப்பதாகவும் கூற ஆரம்பித்திருக்கிறார்கள்.

* * *



பெண் நக்ஷத்திரங்கள் மட்டும்தான் இந்தத் தைலங்களை உபயோகிப்பதாய் நினைப்பது தவறாகும். சில வடநாட்டு ஆண் நக்ஷத்திரங்கள்கூட இவைகளை உபயோகிப்பதாய் கூறுகிறார்கள்.

* * *

யார் என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளலாம். ஆனால், வட இந்திய பிரபல நடிகர் மோதிலாலும், தென்னிந்திய நாரதர் மஹாதேவனும் மட்டும் தாங்கள் உபயோகிக்கும் தைலங்களைப் பற்றிய பேச்சையே எடுக்க மாட்டார்கள். அப்படியே சொன்னாலும் அதை எந்தக் கம்பெனியும் விளம்பரம் செய்ய மாட்டார்கள் என்பது நிச்சயம்!

* * *

இந்த மாதிரியான விளம்பர முறையை நம் சர்க்கார் கைக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது. ரேஷன் அரிசியைப் பற்றி ஜனங்கள் சதா குறை கூறுவதை நிறுத்துவதற்காக சர்க்கார் "பிரபல சினிமா நக்ஷத்திரங்களான குஞ்சிதபாதம் பிள்ளை, சின்னப்பா, புளிமூட்டை, பி. ஆர். மங்களம் முதலியவர்கள் இந்த அரிசியையேதான் உபயோகிக்கிறார்கள்!" என்று விளம்பரம் செய்தால் எவ்வளவு பொருத்தமாயிருக்கும்!

ரத்னமாலா

கதைச் சுருக்கம்

சிம்மகேது மன்னனின் புத்திரியான கட்டழகி ரத்னமாலா கலியாணப் பருவத்தை அடைகிருள். பலதேசத்து ராஜகுமாரர்களின் உருவப் படங்கள் வரவழைக்கப்படுகின்றன. அவைகளில் ரத்னமாலா, சோணபுரத்து அரசன் மகனின் படத்தைத் தேர்ந்தெடுக்கிருள்.

ஆனல் விவாஹத்திற்கு அரசகுமாரன் வரமுடியாமலிருந்ததால் அவனுடைய கத்தியை வைத்தே கலியாணம் நிறைவேற்றப் படுகிறது. இதன் பிறகு புதுத் தம்பதிகள் சந்திக்க வேண்டிய நாளும் வருகிறது. அன்றையதினம் படுக்கை அறைக்குள் ஒரு சிறுவன் நுழைகிருன். ஆனல் ரத்னமாலா மணந்து கொண்டது தன்னை அல்லவென்றும், பக்கத்து அறையில் தொட்டிலில் உள்ள 16 நாள் குழந்தையைத் தான் என்றும், துர்வாசரின் சாபத்திலிருந்து தப்புவதற்காகவே இவ்வித விசித்திர திருமணம் நடத்தப் பட்டதென்றும், இதற்காக வருந்திக்கொண்டிராமல் அக்குழந்தையின் தாயாகவும், மனைவியுமாக இருந்து வளர்த்துவர வேண்டியது அவளது கடமை என்றும் அவன் (மந்திரி குமாரன்) தெரிவித்து விட்டுச் செல்கிருன்.

ரத்னமாலா தன் விதியை நொந்து கொண்டு, விஷயத்தை யாரிடமும் சொல்லிக் குழப்ப மனமில்லாதவளாய், தன் கணவனை குழந்தையை எடுத்துக் கொண்டு தன் மாமனரின் அரண்மனையைவிட்டு யாருக்கும் தெரியாமல் வெளியேறுகிருள்.

ரத்னமாலா குழந்தையுடன் ஊர் ஊராய் அலைகிருள். பல கஷ்டங்களுக்குள்ளாகிருள். தனக்கு ஒரு கவளம் அன்னமும், குழந்தைக்கு ஒரு உழக்குப் பாலும் கிடைக்காமல் தவிக்கிருள். அவளைக் கண்டபடி பலரும் ஏசுகின்றனர். என்ன ஈவிரக்கமற்ற உலகம்!

சோணபுரத்தில்பொழுது விடிந்ததும் ரத்னமாலா குழந்தையுடன் காணமற்போன விஷயம் வெளியாகிறது. ஆனல் அரசன் ரகஸியத்தை வெளியிட விரும்பாததால், அவனல் ரத்னமாலாவின் மறைவைப்பற்றி அவளுடைய பெற்றோர்களுக்குத் திருப்திகரமான பதிலைக் கொடுக்க முடியவில்லை. இந்த மழுப்பலினல் கோபம் அடைந்த சிம்மகேது, தன் மகளின் மறைவிற்கு சோணபுரத் தரசனின் சூழ்ச்சிதான் காரணம் என்று தீர்மானித்துக் கொண்டு தன் சேனைகளை சோணபுரத்துக்கு அனுப்புகிருன். சைன்யம் சோணபுரத்துள் நுழைந்து ரத்னமாலாவைத் தேடுகிறது.

இதற்கிடையில் சைன்யத் தலைவனிடம், குறி சொல்லும் ஒருவன், ரத்னமாலா தன் கணவனுடன் கண்காணுத இடத்தில் சௌக்கியமாக இருப்பதாக குறி சொல்லுகிருன். சைன்யத் தலைவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ரத்னமாலா மணந்து கொண்ட (மந்திரி குமாரனை) வனைத் தாங்கள் சிறைப் படுத்தியிருக்க அவள் எங்கனம் தன் கணவனுடன் சுகமாக இருக்க முடியும் என்பது அவனுக்கு விளங்கவில்லை.

வருஷங்கள் பல கழிகின்றன. ரத்ன மாலா காட்டில் வசித்து வந்த ஒரு வயோதிகத் தம்பதிகள் ஆதரவில் இருந்து வருகிறாள். அவளது குழந்தைக் கணவனும் சிறுவனாக வளர்ந்து விடுகிறான். இச்சிறுவன் ஒரு நாள் மாடு மேய்க்கப் போன இடத்தில் கள்வர்களால் கவர்ந்துசெல்லப் படுகிறான்.

இதற்கிடையில் ரத்னமாலா தன் குழந்தையைத் தேடி அலைகிறாள். அப்பொழுது அவளைத் தேடிக்கொண்டிருந்த ஸைன்யத்தினரிடம் அகப்பட்டுக் கொள்ளுகிறாள். அவர்கள் அவளைப் பலவந்தமாய் அவளுடைய தகப்பனாரின் ராஜ்யத்திற்குக் கொண்டு போக முயலுகிறார்கள். அச்சமயம் எதிர்பாரத விதமாய் கள்வர் கூட்டத்தினர் அங்கு திடீரென்று தோன்றி, சைன்யத் தலைவனையும் அவனுடைய தோழனையும் விரட்டி விட்டு ரத்னமாலாவை அழைத்துச் செல்கின்றனர்.

சைன்யத் தலைவன், சிம்மகேதுவிடம் சென்று நடந்த விஷயங்களை திரித்துக் கூறுகிறான். சிம்மகேதுவால் இச்செய்தியை நம்ப முடியாமலும், தள்ளிவிடமுடியாமலும் போகவே தன் படைகளை அனுப்பி ரத்னமாலாவைத் தேடச் செய்கிறான்.

ரத்ன மாலாவைக் கள்வர் தலைவன் தன் இச்சைக்குட்படாவிட்டால் குழந்தையை சித்ரவதை செய்யப்போவதாகக் கள்வர் தலைவன் பயமுறுத்துகிறான். ரத்னமாலா தன் கற்பை இழக்க விரும்பாமலும். அதே சமயத்தில் தன் குழந்தைக் கணவனை சித்ரவதை செய்வதைத் தடுக்க முடியாமலும் தவிக்கிறாள். இந்த நெருக்கடியான சமயத்தில் ரத்னமாலாவைத் தேடிக் கொண்டிருந்த சிம்மகேதுவின் படைகள் அங்குவந்து ரத்னமாலாவைக் கள்வர்களிடமிருந்து காப்பாற்றி, சிம்மகேதுவிடம் அழைத்துச் செல்கின்றனர். ஆனால் இந்த சந்தடியில் அவளுடைய புத்திரன் காணாமற் போகிறான்.

தகப்பனாரான சிம்மகேதுவே தன் மகளை விசாரணை செய்து, அவளைச் சிறையில் அடைக்கிறான். அதே சிறையில் அடைபட்டிருந்த சோணபுர மந்திரி மகன் இதையெல்லாம் அறிந்து, சிம்மகேதுவை சிறைக்கு வரும்படி செய்து, அவனிடம் ரத்ன மாலா நிரபராதியான பதிவிரதை என்றும், சோணபுரத்து அரசன் செய்த சூழ்ச்சியின் காரணமாகவே இந்த விபரீதங்களெல்லாம் ஏற்பட்டிருக்கின்றனவென்றும் விளக்குகிறான்,

இதுகேட்ட அரசன் கொலைக்களத்திற்கு விரைகிறான். தக்க தருணத்தில் அங்கு சென்று தன் மகள் ரத்ன மாலாவைக் காப்பாற்றுகிறான். முதலில் ரத்னமாலாவுக்கு ஆதரவளித்த வயோதிகத் தம்பதிகள் அவளுடைய காணாமற் போன புத்திரனுடன் அங்கு தோன்றுகின்றனர். ரத்ன மாலா அச்சிறுவனைத் தன் கணவனென தன் தகப்பனாருக்கு அறிமுகப் படுத்துகிறாள். இந்த விபரீதக் கலியாணத்தை உலகம் ஏற்றுக் கொள்ளாதே என்று சிம்மகேது கவலைப்படுகிறான். அதன்பேரில் அந்த வயோதிகத் தம்பதிகள் தங்கள் வேஷங்களை மாற்றிக் கொண்டு பார்வதியும் சிவனுமாகக் காக்ஷி அளிக்கின்றனர். தாங்களேதான் முறையே ரத்னமாலாவாகவும் அவளுடைய குழந்தைக் கணவனாகவும் தோன்றித் திருவிளையாடல் புரிந்ததாய் கூறுகின்றனர், எல்லாம் சுபமாய் முடிகிறது.



பொதுஜனம் பேசுகிறார்

*தமிழ்ப் படமும் நாட்டியமும்

காப்பி ஹோட்டலில் காப்பி எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறதோ அவ்வளவு முக்கியத்துவம் இப்போதெல்லாம், நாட்டியம், தமிழ்ப் படங்களில் பெற்றுவிடுகிறது. "கதாநாயகன் இல்லாமல் கூட படம் எடுத்து விடலாம். ஆனால் பரத நாட்டியம் இல்லாத படம் ஒரு படமா?" என்று கேட்கும் நபர்கள் கூட இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு படத்திலும் எங்காவது ஒரு பேபியோ 'குமாரியோ அல்லது ஒரு அம்மாளோ ஆடிய ஒரு நாட்டியத்தைச் சேர்த்து விடுகிறார்கள். அப்படிச் சேர்த்தாலும் தகுந்த சந்தர்ப்பத்திலாவது சேர்க்கிறார்களா? அதுவுமில்லை. கதா நாயகி கடும் ஆபத்தில் சிக்கி, அதிலிருந்தும் சாமர்த்தியமாய்த் தப்பி, மின்னல் வேகத்தில் ராஜ சபைக்கு ஓடி, துஷ்டர்கள் இருக்குமிடத்தை அரசனுக்கு அறிவிக்க வந்தால், அப்போதுதான் அந்த அசமந்த அரசன், தன் சபையில் நடக்கும் ஓர் அசம்பாவித நடனத்தில் அசட்டுத்தனமாய் லயித்திருப்பான்! (இந்த ராஜ சபைகளிலெல்லாம் ஒரு நடனம் நடந்து தான் தீர வேண்டும் என்று எந்த சினிமா சாஸ்திரம் தான் கூறுகிறதோ! ஈஸ்வரனுக்குத் தான் வெளிச்சம்!) பதினைந்து நிமிஷம் இந்த நாட்டியத்தைக் காட்டி, கதாநாயகி அரசன் முன் வந்து பேசும்போது, நாம் ஆரம்பத்திலிருந்த உத்சாகத்தை இழந்து விடுகிறோம். படத் தயாரிப்பாளர்கள் என்னவோ, நாட்டியத்தை, நல்ல சேமியாப் பாயசத்தில் போடும் முந்திரிப் பருப்பு என்று எண்ணிக் கொள்கிறார்கள். படம் பார்ப்பவர்களுக்கோ, அது நல்ல சேமியாப் பாயசத்தில் தவறி அகப்பட்ட மிளகாய் போல் தோன்றுகிறது. ஆகையால் படம் என்றால் நாட்டியம் சேர்க்கப் பட வேண்டுமென்ற மனப்பான்மை மறைய வேண்டும். அப்படிச் சேர்க்கத்தான் வேண்டுமென்றால் சந்தர்ப்ப மறிந்து கதையின் வேகத்தைப் பாதிக்காமல் சேர்க்கட்டும். அந்த நடனமும் பொறுமையைச் சோதிக்காதபடி இருக்க வேண்டும்.

—கோமதி ஸ்வாமிநாதன்,
திருநெல்வேலி.

பிழைக்கும் வழி

"நடிகர்கள் தேவை?" என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப் படுகிறது. ஆனால் உண்மையில் **100-க்கு 90** கம்பெனிகளுக்கு நடிகர்கள் தேவையில்லை; பணம் தான் தேவை! உண்மையில் நடிகர்கள் தேவையிருந்தால் கம்பெனி அல்லவோ நடிகர்களுக்கு முன் பணம் கொடுக்க வேண்டும், ஆனால் இத்தகைய கம்பெனிகளோ நடிகர்களை முன் பணம் கட்டச் சொல்கின்றன. அதோடு விடுவதில்லை, பதில், பாரம் முதலியவற்றிற்கு நான்கு ரூபாய் கட்டச் சொல்கிறது. இவைகள் எல்லாம் கட்டி முடிந்தவுடன் கம்பெனிக்காரர்கள் யாதொரு பதிலும் எழுதுவது கிடையாது. தபால் தலைகளை நாம் வைத்து அனுப்புவது மேலும் நமக்கு நஷ்டம். நடிப்பதற்கு ஆசை கொண்டோரின் எண்ணம் நிராசையாகப் போகின்றது. ஏழைகள் மலிந்து கிடைக்கும் நம் நாட்டில் ஏழைகளையே வஞ்சிக்கும் மோசக்காரர்களை சர்க்கார் கண்டிக்க ஏற்பாடு செய்யுமா?

—"ஏழை"
கொங்கணாபுரம்

வேஷப் பொருத்தம்

நான் சமீபத்தில் ஒரு தமிழ்ப் படத்தைப் பார்க்கச் சென்றேன். அது ஒரு புராணப் படம். அதில் அர்ஜுனன் வேஷத்தில் தோன்றினார். ஒரு பிரபல நடிகர். அவரைப் பார்த்ததும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. "அர்ஜுனனே இவ்வளவு பருமனாக இருக்கிறாரே, இன்னும் பீமசேனன் எப்படி இருப்பானோ." என்று தோன்றியது,

நம் தமிழ்ப் படங்கள் பெரும்பாலும் மேற் கூறிய விதமாகவே இருக்கின்றன. பண ஆசையால் பிரபல நடிகர்களை ஒப்பந்தம் செய்து கொள்ளும் பட முதலாளிகள் எந்த வேஷத்தையும்—அது அவர்களுக்குப் பொருத்தமாயிருக்குமா, இராதா—என்று கொஞ்சம் கூட யோசியாமல்—அவர்களுக்குக் கொடுத்து கலைக் கொலை நடத்துகிறார்கள். இது கூடாது. இதனால் ஜனங்களுக்கு மிகுந்த அருவெறுப்பு ஏற்படுகிறது.

வேறொரு நாள் மற்றொரு தமிழ்ப் படம் பார்க்கச் சென்றிருந்தேன். அதில்

ஒரு இளைஞன் தேசாந்திரம் புறப்படுகிருன். புறப்படு முன் ஒரு அம்மாளிடம் விடை பெற்றுச் செல்ல வருகிருன். சரி பையன் தன் தாயாரிடம் விடை பெற்றுச் செல்ல வருகிருன் போலிருக்கிறது என நான் நினைத்தேன். ஆனல் அந்த இளைஞனைக் கண்டதும், அவனைவிட வயதான அந்த அம்மாள் "நாதா" என அலறியதையும், இளைஞன் "கண்ணே! அழாதே. சீக்கிரம் திரும்பி விடுகிறேன்" எனத் தேறுதல் சொன்னதையும் கேட்டவுடன் தான். அவர்களிருவரும் கணவன், மனைவி என்று தெரிய வந்தது. என்ன கோரம், பாருங்கள்!

பட முதலாளிகள் தகுந்த நடிகர்களைப் பொறுக்கி யெடுத்து அவரவர்களுக்குத் தகுந்த பாத்திரங்களைக் கொடுத்து நடிக்கச் செய்யவேண்டும். நடிகர்களில் தகுந்தவர்கள் கிடைக்காவிடில் புது முகங்களைப் பொறுக்க வேண்டும். ரஸிகர்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்கும். படமும் நன்ருயிருக்கும்.

—எம். என். வெங்கட்டராமன்,
மதுரை.

அமளி துமளி

எங்கள் ஊரில் உள்ள திருமலை டாக்கீஸ் சரஸ்வதி டாக்கீஸ் ஆக இரண்டு டாக்கீஸிலும் நடக்கும் அக்ரமம் சொல்லத் தரமல்ல. இரண்டாவது ஆட்டத்திற்கு என் சினேகிதர் ஒருவர் போனவர் அயர்ந்து தூங்கி விட்டார். அது சமயம் அவருடைய சட்டைப் பையில் இருந்த எட்டு ரூபாயை எவனே கொள்ளை அடித்து விட்டான், அதுவுமல்லாமல் சில மைனர்கள் பெண்களுக் கென்று ஏற்படுத்தியிருக்கும் பக்கமாகப் போய் உட்கார்ந்து கொண்டு படத்தில் காதல் விஷயமான பாகம் காட்டும் போது ஸ்திரீகள் காதில் படும்படி ஆபாச வார்த்தைகள் பேச ஆரம்பித்து விடுகிருர்கள். திடீரென்று மின்சார விளக்குகள் கெட்டுப் போய் அணைந்து விடும். அச் சமயங்களில் சில மைனர்கள் உடனே ஸ்திரீகள் பக்கம் புகுந்து அக்ரமம் செய்வது வழக்கம். ஆட்டம் முடியும் கடைசி நேரத்தில் சில மைனர்கள் எழுந்து ஓடும் படத்தின் ஒளியில் துணியைக் கொண்டு ஆட்டுவதும், கை விரல்களைக் கொண்டு ஆபாசமாகக் காண்பிப்பதும் வழக்கமா யிருக்கிறது. சில ஜனங்கள் படம் முடிய 5 நிமிஷம் முன்னதாகவே எழுந்து நிற்பதும் போவதுமாக இருக்கிருர்கள். சரஸ்வதி டாக்கீஸில் படத்தின் கடைசி பாகம் வந்ததும் ஒலி பரப்பின் சப்தம் முழுவதையும் வெளியே திருப்பி விடுகிருர்கள். அப்பொழுது சைலென்ட படம் போல் இருக்கிறது. இது விஷயம் கண்டிக்க ஒருவரும் இல்லை.

—கே. எஸ். சுப்ரமண்யம்,
பெ. நத்தம், செங்கல்பட்டு

பூலோக நரகம்!

மைசூரில் 8 தியேட்டர்கள் இருக்கின்றன. (இன்னும் 2 சமீபத்திலேயே திறப்பு விழாவிற்குக் காத்திருக்கின்றன) ஆனல் இவைகளில் முற்றும் புதிய முறையில் தக்க வசதிகளுடன் கட்டப் பட்டிருப்பது "பிரபுதேவ்" ஒன்று தான. மற்றவைகளில் இரு தியேட்டர்கள் சுமாரானவை. மற்ற தியேட்டர்களோ மோசமானவை.

மேற்சொன்ன நல்ல தியேட்டர்களிலோ நல்ல படங்கள் காட்டப்படுவதே இல்லை. தமிழ் நாட்டில் உபயோகமற்றவை என்று ஒதுக்கப் பட்ட ஒழிசல் படங்கள் தான் மாதக் கணக்கில் காட்டப் படுகின்றன. இந்தப் (தமிழ்ப்) படங்களில் ஆபாசம் நிறைய உண்டு என்னும் தளராத நம்பிக்கையால் மூன்றணு 'வாலா'க்கள் முதல், மேல் வகுப்பு பிரமுகர்கள் வரை ஈ மொய்ப்பது போல் இந்தத் தியேட்டர்களை முற்றுகை இடுகின்றனர்.

இவ்வூர்த் தியேட்டர்கள் அனைத்திலும் மோசமான "ஒலிம்பியா" தியேட்டரிலோ 90 சத விகிதம் நல்ல படங்களே காட்டப் படுகின்றன. நல்ல படம் என்ற காரணத்தால் படுமோசமான இந்தத் தியேட்டருக்குள் பொது மக்கள் அடைபட்டு அவதிப்பட வேண்டி யிருக்கிறது. ஆனல் இந்த தியேட்டர் முதலாளிகள் இதைப் பற்றி கவலைப் படுவதாகக் காணேம்.

தங்கள் தியேட்டர் நல்லதா யிருக்கிற காரணத்தால் அதை நடத்துபவர்கள் ஒன்ணும் நம்பர் ஒழிசல் படத்தையே தருவிக்கிருர்கள். நல்ல படத்திற்கு நரகத்திலும் கூட நல்ல வசூல் ஆகிவிடுமல்லவா? இந்த நிலைமை சகிக்கக் கூடியதாயில்லை. நம் பட முதலாளிகள் ஏன் நல்ல தியேட்டர்களுக்கு நல்ல படங்களை

*பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர்:

கோமதி ஸ்வாமிநாதன்,
வண்ணூர்பேட்டை,
திருநெல்வேலி.

யும், மோசமான தியேட்டர்களுக்கு மோசமான படங்களையும் அனுப்பி வைக்கக் கூடாது!

—"பரதேசி"
மைசூர்.

தியேட்டருக்குள் விற்பனை

எங்கள் ஊர் ஜெயராம் தியேட்டர் கடந்த ஓர் ஆண்டுக்கு முன்பு ஒரு சந்தை மடம் போல் காக்ஷியளித்தது. ஆனல் இந்த ஓர் ஆண்டுக்குப் பின் சில சௌராஷ்டிர முதலாளிகள் அந்தத் தியேட்டரை காண்டிராக்ட் எடுத்ததின் பயனய் சில சீர்திருத்தங்கள் செய்து கொஞ்சம் நல்ல நிலைமையில் இருந்தது.

ஆனல் சில காலமாக இத் தியேட்டரில் நிம்மதியாய் படம் பார்க்க முடிகிறதில்லை. படம் திரையிடப் பட்ட உடனே "அல்கா டீ அணு 1½, முருக்கு, மிக்சர்" என்று கூச்சல் போடுவது கொஞ்சமும் சகிக்க முடியாததாக இருக்கிறது. சில சமயங்களில் டீ விற்பனை செய்பவனுக்கும் படம் பார்க்கும் பொது ஜனங்களுக்குமே தகராறு ஏற்பட்டு கூச்சல் ஜாஸ்தியாகி விடுகிறது. இதனலெல்லாம் தான் இத் தியேட்டரில் படங்களை சரிவர பார்க்க முடியாமல் போகிறது. ஆதலால் இக் கெட்ட வழக்கத்திற்கு (தியேட்டருக்குள் விற்பனை) அதன் சொந்தக்காரர் ஒரு முடிவேற்படுத்துவார் என்று எதிர்பார்க்கிறேன்.

கே. ராமஸ்வாமி
மதுரை.

ஆட்ட காலம்

சமீபத்தில் வேலூரில் புதிதாக ஆரம்பிக்கப் பட்ட "சாயிபாபா டாக்கீஸ்" தான் இவ்வூரிலேயே சிறந்த தியேட்டர் என்பது பொது மக்களின் அபிப்பிராயம். டிக்கெட்டுகளை வாங்கி விற்பவர்களுக்கு எவ்வித வழியுமின்றி, டிக்கெட் வாங்கினவர்கள் நேராக தியேட்டருள் போகும்படி ஏற்பாடு செய்துள்ளது குறிப்பிடத் தக்கது.

ஆனல் கொட்டை எழுத்துக்களில் 'முதல் ஆட்டம் 6-30 மணிக்கு, இரண்டாவது ஆட்டம் 9-30 மணிக்கு' என்று சுவரொட்டிகளிலும், நோட்டீஸ்களிலும் விளம்பரப் படுத்தி விட்டு, குறித்த நேரத்தில் ஆட்டத்தைத் துவக்காமல் தரை மகா ஜனங்கள் பொறுமை இழந்து சீட்டியடித்தும், கற்களை வீசியும், ஆரவாரம் செய்யத் தொடங்கிய பின்னரே ஆட்டத்தை ஆரம்பிக்கிருர்கள். ஒரு சில சமயம் பெரும்பாலோர் எழுந்து நின்று, கூச்சல் போட்டு, பெஞ்சுகளை தூக்கிப் போட்டு உடைக்கும் பொழுது, ஸ்திரீகள் பயந்து போய், வீடு சேர்ந்தால் போதுமென்ற எண்ணத்துடன், வெளிக்கிளம்பவும் முயற்சிக்கிருர்கள். கள்ள மார்கெட் - டிக்கெட் விற்பனையாளரிடமிருந்து, தப்ப பொதுமக்களுக்கு இயன்ற வசதியை அளித்துள்ள இத் தியேட்டர் முதலாளி, இனியேனும் குறித்த நேரத்தில் ஆட்டத்தை துவக்கி, அனுவசியமான கலாட்டாக்களுக்கு இடமில்லாமல் செய்வாரா?

கே. ஆர். மூர்த்தி,
வேலூர்.

குண்டர்கள் ராஜ்யம்

அரிசி, துணி முதலிய பொருள்கள் விற்பனையில் கள்ள மார்க்கெட் ஒழிந்தாலும் ஒழிந்துவிடும். ஆனல் தியேட்டர்களில் டிக்கெட் விஷயமாக உள்ள கள்ளமார்க்கெட் ஒழியாது போலிருக்கிறது. பத்து அல்லது பதினைந்து குண்டர்கள் சேர்ந்து கொண்டு ("மிஸ் மாலினி"யில் டிக்கெட் வாங்குவதைப்போல்) டிக்கெட்களை வாங்கி விடுகிருர்கள். குறிப்பிட்ட டிக்கெட்களை விற்றதும் தியேட்டரில் டிக்கெட் கொடுப்பதை நிறுத்தி விடுகிருர்கள். ஆனல் அடுத்த நிமிஷம் குண்டர்கள் டிக்கெட் கொடுக்க ஆரம்பித்து விடுகிருர்கள். நான்கு அணு டிக்கெட்டை எட்டணு அல்லது ஒன்பது அணுவுக்கும், ஆறு அணு, பத்து அணு டிக்கட்டுகளை ஒரு ரூபாய், அல்லது ஒண்ணேகால் ரூபாய்க்கும் விற்று விடுகிருர்கள். இந்த குண்டர்களின் முறட்டுத் தனத்தால் பொதுமக்கள் டிக்கெட் வாங்க முடிவதில்லை. இது விஷயத்தில் உடனே போலீஸ் அதிகாரிகளும் தியேட்டர் முதலாளிகளும் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அரசாங்கத்தார் இவ்வாறு விற்பவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும். தியேட்டரில் ஒருவருக்கு ஒரு டிக்கெட்டுக்கு மேல் கொடுக்காதபடி தியேட்டர் நிர்வாகிகள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

—பா. பாலசுப்ரமணியன்,
கும்பகோணம்.

நீங்கள்
சந்தாதாரர்களாய்
சேர்ந்துவிட்டீர்களா?
இல்லையேல்
சேருங்கள்
வருஷ சந்தா ரூ. 6

"சிவம்"

பொழுது விடிந்து பொழுது போனால் எவ்வளவோ பேர்கள் படம் பிடிக்கிறார்கள்; திரையிடுகிறார்கள்; நாமும் அவற்றை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். படமும் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது; சிலர் படத்தை ஓட்டிக் கொண்டும்தான் இருக்கிறார்கள்! நல்ல படங்களும் வருகின்றன. சுமாரான படங்களும் சுகமாக ஓடுகின்றன. மோசமான படங்களும் வந்து குவிகின்றன.

ஆனால் ஜெமினி படங்கள் என்றாலோ அலாதி ரகம் தான். அவை உயர்ந்த ரகம் என்பது மட்டு மல்ல; நூதனமானதாகக் கூட இருக்கும். மற்ற படங்கள் என்றால், ஏதோ திரையிடப் பட்டது பார்த்தோம் என்று இருந்து விடுகிறோம். ஆனால் ஜெமினி படங்கள் திரையிடப்படும்முன்னரும் சரி, திரையிடப்பட்ட பின்னரும்சரி; அதைப்பற்றிய பேச்சுதான் எங்குமே முழங்கும்.

ஜெமினி "சந்திரலேகா" விஷயமோ சினிமா வட்டாரத்திலேயே ஒரு பரபரப்பை உண்டு பண்ணியிருக்கிறது. "சந்திரலேகா" சினிமா ரஸிகர்களால் பெரிதும் ஆவலாக எதிர்பார்க்கப்படுவதில் ஆச்சரியமொன்றும் இல்லை. சினிமாத் தொழிலில் சம்பந்தப்பட்ட இதர பட முதலாளிகள் உள்பட ஒவ்வொரு நபரும் இந்தப் படம் திரையிடப்படுவதை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள் என்றால் அதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கவே செய்கின்றன. கடந்த சில மாதங்களாக தொழில் சம்பந்தப்பட்டவர்களிடையே "சந்திரலேகா"வைக்

இயற்கை வனப்பும் செயற்கை வனப்பும்
(ராஜகுமாரி)

படங்களை வெளியிடும் தேதியை ஒத்திப் போட்டிருக்கிறார்கள்.

"சந்திரலேகா" படம் தயாரித்து முடிப்பதற்கான செலவை நினைக்கும்போது மலைப்பாகத்தான் இருக்கிறது. ஒன்று, இரண்டு அல்ல; முப்பது லக்ஷம் ரூபாய்கள் செலவாகி இருக்கிறது என்று அறியும் போது தென்னாட்டிலென்ன வட இந்தியாவில்கூட இவ்வளவு அதிகமான செலவில் ஒரு படம் தயாரிக்கப்பட்டதில்லை என்று திண்ணமாகக் கூறி விடலாம்.

குறித்த பேச்சுத்தான் பிரமாதமாக இருக்கிறது. "எதிர்கால தமிழ்ப் பட உலகமே 'சந்திரலேகா' வைப் பொறுத்துத்தான் இருக்கிறது." இது நான் கூறும் வார்த்தை அல்ல. படத் தொழிலில் சம்பந்தப்பட்ட படேபடே பிரமுகர்கள் இப்படிக் கூறுகிறார்கள்.

அவர்கள் கூறுவது என்னவோ உண்மைதான். சினிமாத் தொழிலில் மூலதனம்போட திட்டமிட்டிருக்கும் பல தனவந்தர்கள "சந்திரலேகா"வைத் தான் நம்பி யிருக்கிறார்கள். எனக்கு நன்றாகத் தெரியும், பல முதலாளிகள தங்கள் படம் முடிவடைந்து வெளியிடத் தயாராயிருந்தும் "சந்திரலேகா" திரையிடப் படுவதினால், தங்கள்

முப்பது லக்ஷம் ரூபாயில் மூன்றரை வருஷ காலத்தில் தயாரான படம் "சந்திரலேகா". தய்ாரித்து முடிக்க மூன்றரை வருஷங்கள் பிடித்தனவே தவிர, ஏழு வருஷங்கள் என்பதுதான் உண்மையான கால அளவு. ஜெமினி ஸ்டுடியோ தொழிலாளிகள் ஊக்கத்துடன் இராப் பகலாக உழைத்து ஏழு வருஷ வேலையை மூன்றரை வருஷங்களில் செய்து முடித்திருக்கிறார்கள்.

யாரை ஏமாற்ற
இந்த ஆட்டம்?

"சாதாரணமாக ஒரு படம் பிடிக்க அதிகமானலும் ஐந்தாறு லக்ஷத்திற்கு மேலாகாதே. இந்தப் படத்திற்கு மட்டும் ஏன் இவ்வளவு செலவு?" என்ற எண்ணம் தோன்றத்தான் செய்யும். படத்தைப் பார்க்கும் ரஸிகர்களுக்கு இந்த சந்தேகம நிவர்த்தியாகிவிடும். 'மங்கம்மா' படத்தின் காக்ஷி ஜோடனைகளைக் கண்டு வியந்தவர்கள் 'சந்திரலேகா"வின் காக்ஷி ஜோடனைகளை கண்டால் "சபாஷ் ஜெமினி" என்றுவாய் விட்டு கூவத்தான் செய்வார்கள் ஒவ்வொரு காக்ஷி அமைப்பதற்கும் பிடித்திருக்கும் செலவைக் கொண்டுஉண்மையான ஒரு கட்டிடத்தையே கட்டிவிடலாம். உதாரணமாக, இரண்டு செட்டுகளைக் குறிப்பிடுகிறேன். (1) அரண்மனையின் வாயில். அங்கே தான் பிரம்மாண்டமான பல டமாரங்கள்மீது நூற்றுக் கணக்கானவர்கள் நடனம் ஆடுகிறார்கள். அதைப் பார்த்தவர்கள் ஜெமினி ஸ்டுடியோவில் ஒரு 'ஸெட்டு'க்கு முன்னால் நிற்பதையே மறந்து ஏதோ ஒரு அரண்மனையின் வாயிலில் நிற்பதாகவே நினைத்தார்கள். (2) மற்றொன்று மலைக்குன்றுகள். கதா நாயகனைப் பிடித்து ஒரு குகைக்குள் தள்ளி மா பெரும் பாறையொன்றால் அதன் வாயை மூடி விடுகிறான் வில்லன். ஒரு சர்க்கஸ் கூட்டத்தார் தங்கள் யானைகளின் உதவி கொண்டு அந்தப் பாறையை அப்புறப்படுத்தி கதா நாயகனை விடுவிக்கிறார்கள். இதற்காகப் போடப்பட்டிருந்த காக்ஷி அமைப்பை நேரில் பார்க்க நேர்ந்த நான் மலைக் குன்றுகளையும் குகைகளையும் தான் என் கண் முன்னே கண்

கண்கள் பேசுகின்றன (ராதா, ராஜகுமாரி)

அழகான பல காக்ஷி அமைப்புகளில் ஒன்று

டேன். அவ்வளவு தத்ரூபம்; கொஞ்சம் கூடப் புகழ்ச்சியில்லை.

இந்தப் படத்தில் ஆயிரத்து ஐநூறு 'எக்ஸ்ட்ரா'க்களுக்கு மேல் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். இந்தப் படத்தில் ஒரு அற்புதமான 'ட்ரம் டான்ஸ்' (டமார நடனம்) வருகிறது. பிரம்மாண்டமானஏராளமான - டமாரங்கள் வைக்கப்பட்டு அவைகள் மீது நூற்றுக் கணக்கான ஆண்களும், பெண்களும் நடனம் ஆடுகிறார்கள். இந்தக் காக்ஷியில் நாட்டியமாடுவதற்காக ஆண்களும் பெண்களுமாக இருநூற்றைம்பது பேர்களுக்கு இரண்டு வருஷ காலம் பயிற்சி அளிக்கப் பட்டது. அவ்வளவு பேரும் ஜெமினியில் மாதச் சம்பளத்தில் அமர்த்தப் பட்டிருந்தார்கள். இது தவிர இந்தப் படத்தில் மற்றும் பலவிதமான நாட்டியங்கள் இடம் பெற்றிருக்கின்றன.



அரண்மனையின் முன்புறம் இங்குதான் அதிசயமான டமார நடனம் நடைபெறுகிறது

ஜெமினி ஸ்டுடியோ இரண்டு மாதங்களுக்குச் சர்க்கஸ் கம்பெனியாகவே இருந்த விஷயம் பலருக்குத் தெரியாது. "சந்திரலேகா"வில் சர்க்கஸ் சம்பந்தமான சில நிகழ்ச்சிகள் வருகின்றன. அதற்காக "கமலா ஸர்க்கஸ்" என்ற ஒரு பெரிய சர்க்கஸ் கம்பெனி சில மாதங்களுக்கு ஜெமினி ஸ்டுடியோவில் கூடாரம் போட்டிருந்தது. அந்தக் காக்ஷியில் எவ்வளவு அற்புதங்கள்! புலி, சிங்கம், கரடி, குதிரைகள், ஒட்டகங்கள், சிறுத்தை, முதலியவைகளைப் படத்தில் பார்க்கலாம்.

படத்தில் வரும் கத்திச் சண்டை பிரமாதமாக இருக்குமாம். நூற்றுக் கணக்கான வீரர்கள், சாதாரணமாகவும், குதிரைகள் மீதிருந்தும் கத்திச் சண்டை செய்யும் காக்ஷிகள் தத்ரூபமாகப் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. ரஞ்சனுக்கும் ராதாவுக்கும் நடக்கும் வாள் போர் "பிரிஸினர் ஆப் ஸெண்டா" என்ற ஆங்கிலப் படத்தில் ரோனால்டு கால்மன் செய்யும் கத்திச் சண்டையை நிகர்த்ததாயிருக்கும் என்று சொல்லப்படுகிறது.

ஆடை ஆபரணங்களைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. துணி ரேஷன் காலத்தில் இவ்வளவு உயர்வான ஆடைகள் இவர்களுக்கு கிடைத்ததுபற்றி ஆச்சரியப்படத்தான் வேண்டுமாம். அது மட்டுமல்ல; ஒவ்வொரு உடையும் இதுவரை எவராலும் உபயோகிக்கப் படாத நூதனமான ரகத்தைச் சேர்ந்தவையாயிருக்குமாம்.

"சந்திரலேகா" சரித்திர நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கதை. படம் ஏற்கனவே ஹிந்தி சம்பாஷணைகளுடன் தயாரிக்கப் பட்டுவிட்டதே படத்தின் பிரமாதமான வெற்றிக்கு அறிகுறி. படத்தை ஆங்கிலத்தில்கூட "பேச வைக்கும்" முயற்சிகள் நடைபெற்று வருகின்றனவாம்.

சில தினங்களுக்குமுன் "சந்திரலேகா"வின் பிரதி யொன்று லண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்குள்ள சினிமாத்தொழில் பிரமுகர்களுக்குக் காட்டப்பட்டதாம். இப்படத்தைப் பார்த்த அவர்கள் இம் முயற்சியைப் பெரிதும் பாராட்டியதாகத் தெரிகிறது.

இவ்வளவுக்கும் மேலாக நடிகர்கள் ஜாபிதா ஒரே நக்ஷத்திர மயம்தான். ராஜகுமாரி, ராதா, ரஞ்சன், சுந்தரி பாய், நாராயணராவ், பொட்டை, கிருஷ்ணன், மதுரம் முதலியவர்கள் இதில் நடித்திருக்கிறார்கள்.

இவ்வளவும் தெரிந்த பிறகு ஏற்கனவே ஆவலாக இருக்கும் ரஸிகர்கள் "சந்திரலேகா"வைக் காணத் துடிதுடிப்பார்கள். ஆனால் அவர்களுடைய ஆவலைப் பூர்த்தி செய்யும் தினம் அதிக தூரத்தில் இல்லை.

ஏப்ரல் மாஸம் 9-ம் தேதி இந்திய சினிமாவின் சரித்திரத்திலேயே ஒரு மகத்தான தினமாக இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அன்று "சந்திரலேகா" நாற்பது பிரதான நகரங்களில் ஏககாலத்தில் திரையிடப்படும். சென்னையில் மட்டும் நான்கு தியேட்டர்களிலும், பெங்களூரில் இரு தியேட்டர்களிலும் திரையிடப் படும்.

"சந்திரலேகா" இந்திய சினிமாத் தொழிலுக்கே ஒரு அழியாப் புகழைத் தேடிக் கொடுத்து, ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் அவர்களை இந்தியாவின் ஸெஸில் பி. டி. மில்லி ஆக்கிவிடுமென நம்புகிறேன்.

சென்னை 600 008.

நவகாளி யாத்திரை
வெள்ளி மணி.. ஆசிரியர்
சாவி..... எழுதியது

மகாத்மாஜியின் நவகாளி யாத்திரையிலும், தமிழக யாத்திரையிலும் நேரில் கலந்து கொண்ட ஸ்ரீ சாவி அவர்கள் எழுதிய கட்டுரைத் தொகுதி. சுமார் எண்பது பக்கங்கள் கொண்டது. யாத்திரை சம்பந்தமான இரு வணப் படங்கள் ஆர்ட் காகிதத்தில் அச்சிடப் பெற்று அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கல்கி
ஆசிரியர்
முன்னுரையுடன்

விலை ரூபாய்
1-8-0

புதுமுறை
வெளியீடு

புதுமுறை வெளியீடு, மாம்பலம், சென்னை 17.

காந்திஜிக்கு காணிக்கை

கடவுளை வழிபடுவதற்கு சங்கீதம் ஒரு சிறந்த சாதனம். பாமாலைகளை பஜனையின் மூலம் பாடி, கடவுளை வழிபடுவது நம் நாட்டின் பொதுப்படையான வழக்கமாக இருந்து வருகிறது. நம்முடைய தேசத்தின் பிதா காந்தியடிகளும், ஈசுவர தியானத்திற்கு, "ரகுபதி ராகவ ராஜா ராம், ஈசுவர அல்லா தேரே நாம்" என்ற எம் மதமும் சம்மதப்படக் கூடிய பாமாலையைப் பிரதி தினமும் பஜித்து வந்தார். அவருடைய பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட யாவரையும் மேற்படி பஜனையில் ஈடுபடும்படிச் செய்தார். அவருடைய பூதவுடல் நம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்ட போதிலும், அவர் போதித்த பிரார்த்தனை கீதம் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. பாபுஜி மறைந்ததையும், அவர் குணதிசயங்களையும், அவருடைய உபதேச மந்திரத்தையும் மஹாத்மாஜியின் பாமாலைகளாக சரஸ்வதி ஸ்டோர்ஸார் கொலம்பியா ரிகார்டுகள் மூலம் அளித்திருக்கிறார்கள். ஸ்ரீ. எம். கே. தியாகராஜ பாகவதரும், ஸ்ரீமதி. டி. கே. பட்டம்மாளும் மேற்படி பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். இவைகளில் ஸ்ரீ. பாகவதர் பாடியுள்ள இரண்டு பாட்டுகளும் பாபநாசம் சிவன் இயற்றியவை. பாபநாசத்தின் சாகித்தியத்தை பாகவதர் பாடித்தான் கேட்க வேண்டும். சில வருஷங்களாய், நம்மைப் பிரிந்திருந்த பாகவதருடைய வெண்கல நாதம், முதன் முதலாக, காந்திஜியைப் பற்றி கவனம் செய்யப்பட்ட பாமாலைகளின் மூலம் கண கண வென்று ரீங்காரம் செய்கிறது. இதன் மூலம் பாகவதருடைய சங்கீத ஞானமும், ஜீவசக்தி வாய்ந்த நாதமும், புனிதம் அடைந்து விட்டது. பாகவதர் பாடியுள்ள இரண்டு பாமாலைகளில், ஒன்று செஞ்சுருட்டி ராகத்தில், "காந்தியைப் போல் ஒரு சாந்த சொரூபனைக் காண்பது எளிதாமோ?" என்று ஆரம்பமாகிறது. சாகித்தியம் உயரிய கருத்துக்களைக் கொண்டிருக்கின்றது. மகாத்மாஜியை, ஏசுநாதருடனும் புத்த பகவானுடனும் ஒப்பிட்டுப் பாடும்போது, பாகவதர் ஒவ்வொரு வார்த்தையையும் அவருக்கே சொந்தமான கணீர் என்ற சாரீரத்துடன் ஒவ்வொருவர் மனதிலும் நின்று நிலைக்கும்படி பாடியிருக்கிறார்.



பாகவதர்

டி. கே. பட்டம்மாள்

இந்த இசைத் தட்டின் மறு பக்கத்தில், கேதார கௌளத்தில், "கைம்மாறு செய்வ துண்டோ?" என்று தொடங்கி, "பூர்ண சுதந்திரம் கண்ட நம் பாபுவிற்கு" என்று முடிக்கிறார். இப் பாட்டின் ஒவ்வொரு வார்த்தையையும், வேத வாக்கியமாய் மதிப்பிடலாம். இதில், "சேய்க்கு வரும் நோய்க்கு தாய் மருந் துண்பது போல், தாய் நாட்டு தொல்லை கட்குத்தான் உண்ணாதிருப்போர்க்கு' "போர்முனை வாள் கொண்டு உயிர் ரத்தம் சிந்தாமல் பூர்ண சுதந்திரம் கண்ட நம் பாபுவிற்கு" என்ற கடைசி இரண்டு வரிகளையும் கேட்கும் போது ஜனவரி 30உ வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணி பளிச்சென்று நம் கவனத்திற்கு வருகிறது.

இரண்டாவது இசைத் தட்டில் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் பாடியுள்ள இரண்டு பாட்டுக்களும், ஸ்ரீ. ஈ. எஸ். சேதுராமய்யா அவர்களால் இயற்றப்பட்டவை. "கரம் சந்திர மோகனதாஸ் காந்தி" என்று ஆரம்பிக்கிறது. பாட்டின் முடிவில்தான் நம் தேச மக்களுக்கே சொந்தமான "ரகுபதி ராகவ ராஜா ராம்", "ராம ராம ஜெய சீதாராம்" என்று உருக்கமாக முடிகிறது. அப்போது காந்தி மகாத்மாவின் பிரார்த்தனை வேளையும், பொக்கை வாய் மோஹனப்புன்சிரிப்பும் கண்முன் தோன்றி மறைகின்றன. ஸ்ரீமதி பட்டம்மாள் அவர்களுக்குச் சொந்தமான சுக சாரீரத்தில் அற்புதமாகப் பாடி நம்மைப் பரவசப்படுத்துகிறார். பின் புறமுள்ள மற்றொரு பாட்டு "சாந்தி நிலவவேண்டும்; எங்கும் ஆத்ம சக்தி ஓங்க வேண்டும்" என்று ஆரம்பிக்கிறார். பாட்டில் இருக்கும் கருத்துக்களை மனதில் பதியும்படி எடுத்து நிதானமாகப் பாடி முடிக்கிறார்.

சரஸ்வதி ஸ்டோர்ஸாரால் வெளியிடப்பட்டுள்ள மேற்படி இரண்டு இசைத் தட்டுகளும் பாபுஜி அவர்களின் இரு பாத கமலங்களில் சேர்க்கப்படும் இரு காணிக்கைகளாகவே அவர்கள் கருத வேண்டும். இவ்விரண்டு இசைத் தட்டுகளும் ஒவ்வொருவர் வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டிய பொக்கிஷமாகும்.

Truthful
READY MADE CLOTHES

அழகை அழகு பெறச் செய்வது
அழகான
"ட்ருத்புல் ஆடைகளே"

தயாரிப்பவர்கள்:
ட்ருத்புல் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,
மதுரை.

பலே சாந்தாராம்!

பிரபல வட நாட்டு டைரெக்டர் ஸ்ரீ.சாந்தாராம் எந்தக் காரியத்தையும் உபயோகமான வழியில் செய்பவர். தற்சமயம் அவர், மகாத்மா காந்தியின் வாழ்க்கையை டெக்னிகலரில் படம் பிடிப்பதற்காக யோசனைசெய்து வருகிறாராம். இந்த முயற்சி வெற்றி பெறுமாக.

சுப்புவின் காலக்ஷேபம்.

சினிமா நடிக டைரெக்டர் ஸ்ரீ.கொத்தமங்கலம் சுப்பு, மகாத்மா காந்தியின் மறைவுக்காக சில இடங்களில் அவருடைய 'காந்திமகான் கதை'யை காலக்ஷேபமாகச் செய்து வருகிறார்.

இரண்டு காளிதாஸ்.

அம்பிகா பில்ம்ஸாரும், ஆர். கே. எஸ். பிக்சர்ஸாரும் தனித் தனியே "காளி தாஸை" படமாகத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். ஆர். கே. எஸ்.பிக்சர்ஸின் 'காளிதாஸ்' படத்தில் ஹொன்னப்ப பாகவதர் நடிக்கக்கூடும் என்று தெரிகிறது. ஏ. டி. கிருஷ்ணசாமிதான் டைரெக்ட் செய்யப் போகிறார்.

ரிஷி கிளம்பிவிட்டார்.

எந்த ரிஷி என்கிறீர்களா? "பிரம்மரிஷி விஸ்வாமித்ரா"தான். முன்பு எங்கோ திரையிடப் பட்டு மீண்டும் தவத்தில் அமர்ந்து விட்டாரல்லவா? அந்த ரிஷியின் 'தவத்'தைக் கலைக்க என். எஸ். கே. வந்தார். ரிஷியைத் தமாஷாவுடன் கூட்டிக் கொண்டு பவனி கிளம்பினாராம்.

வனிதை மயக்க முடியவில்லை.

ஆம்; சாதாரண வனிதை யல்ல— "விசித்ர வனிதை"யாயிற்றே! கே. சுப்ரமண்யம் டைரெக்ஷனில் உருவான 'வனிதை' திருச்சியில் திரையிடப்பட்ட சில வாரங்களுக்கெல்லாம் 'மயக்க' முடியாமல் போய்விட்டதாம்.

நிஜம் வெளியாகி விட்டது.

நிஜம் வெளியாகி விட்டது என்ற தலைப்பைப் பார்த்ததும் 'யாருடைய நிஜம் வெளியாகி விட்டது' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அது தான் தமிழ்ப் பட ரசிகர்களுக்கு இதுவரை தமிழ் நாடு டாக்கீஸார் காட்டாதிருந்த 'நிஜம்' வெளியாகியிருக்கிறது. இது நிஜமா? என்று கேட்கிறீர்களா? வாஸ்தவமாகத் தான் கூறுகிறேன். "இது நிஜமா?" படம் வெளியாகி விட்டது. நவீனப் படமான இதை நன்றாகவே ரசிக்கிறார்களாம் காலேஜ் மாணவர்கள்.

கற்பனை உதயம்.

யாருடைய கற்பனை? எப்போது உதயம்? என்றெல்லாம் எண்ணும் உங்கள் மனது. உதய சங்கரின் கற்பனை—கல்பனா உதயமாகி ஜஹஜோதியாய் வட நாட்டில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. நாட்டிய அம்சங்களை சிறப்பாகக்கொண்ட இப்படம், தமிழ்நாட்டு ஸ்டுடியோவான ஜெமினியில் தயாரிக்கப் பட்ட பெருமை நம்முடையது.

மதுரம் தாயானார்.

பிரபல சினிமா நடிகை டி. ஏ. மதுரம் பிப்ரவரி மாஸம் பதினெட்டாந் தேதி யன்று ஒரு பெண் குழந்தைக்குத் தாயானார் என்ற செய்தி கேட்டு மகிழ்கிறோம். குழந்தைக்கு கலைச் செல்வி என்று பெயரிடப் பட்டது.

சினிமாக்களுக்கும் லீவு

ஹோட்டல், கடை, ரேஷன் கடை, மற்றுமுள்ள சில வியாபார ஸ்தலங்கள், ஆபீஸ்கள் ஆகிய இவைகளுக்கு மட்டும் வாரம் ஒரு நாள் லீவு இருந்து வந்திருக்கிறது. ஆனால் கொட்டகைகளுக்கு என்னமோ ஓய்ச்சல் ஒழிவே இருப்பதில்லை. சமீபத்தில் ஏற்பட்ட வாராந்திர விடு முறைச் சட்டத்தின்படி ஒவ்வொரு வாரத்திலும் திங்கட்கிழமை யன்றுகாட்சிகள் கிடையாது.—அன்று விடு முறை தினமாகும். ஆதலால் சென்னையிலுள்ள இருபத்தி ஐந்து தியேட்டர்களும் திங்கட் கிழமையன்று விடு முறையை அனுஷ்டித்து வருகின்றன.

நாட்டியப் பிரசங்கங்கள்

பரத நாட்டியத்தைப் பற்றிய அருமையான பிரசங்கங்களை ஸ்ரீமதி ருக்மணி தேவி, மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் சில தினங்கள் செய்தாராம். நாட்டியத்தில் பற்றுள்ள பலர் கூட்டத்திற்கு வந்து பிரசங்கத்தைக் கேட்டார்களாம். வைபவத்திற்கு ஜஸ்டிஸ் பி. வி. ராஜ மன்னார் தலைமை வகித்தாராம்.

குழந்தைகள் விரும்பும் சினிமாப் படங்கள்

குழந்தைகள் எவ்விதமான சினிமாப் படங்களை அதிகம் விரும்புகின்றனர் என்பதை அறிவதற்காக, சமீபத்தில் பிரிட்டனிலுள்ள சகல சினிமாப் பட முதலாளிகளும் 7 முதல் 15 வயதிற்குட்பட்ட சுமார் 50000 குழந்தைகளுக்குப் பல வினாக்களை அனுப்பி விடைகள் தரும்படி கேட்டுக் கொண்டனர். இவ் வினாக்களுக்குக் குழந்தைகள் அனுப்பியுள்ள பதில்களைக் கண்டு சினிமா முதலாளிகள் பெரிதும் ஆச்சர்யப் படுகின்றனர்.

சாதாரணமாக, குழந்தைகள் சண்டைகள் நிறைந்த 'ஸ்டண்ட்' படங்களையே விரும்புவார்களென சினிமா முதலாளிகள் எதிர் பார்த்தனர். ஆனால் இக் குழந்தைகளின் விடைகளில் 'ஸ்டண்ட்' படங்களுக்குக் கடைசி ஸ்தானமே அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாறாக சரித்திரம் சம்மந்தப் பட்ட படங்கள் முதல் ஸ்தானம் வகிக்கின்றன.

ஆண், பெண் இரு பாலரும் மிருகங்களைப் பற்றிய (வனக்காட்சிகள் நிறைந்த) சினிமாப் படங்களை விரும்புவதாக அறிவித்துள்ளனர். காதல் கட்டங்கள் நிறைந்த படங்களைப் பார்ப்பதில் ஆண்களில் 19 சத விகிதத்தினரும், பெண்களில் 66 சத விகிதத்தினரும் ஆவல் தெரிவித்துள்ளனர், ஆண்களில் 43 சத விகிதத்தினரும், பெண்களில் 51 சத விகிதத்தினரும் விபத்துகள், கொலை முதலியவைகளில் முடியும் படங்களை விரும்பவில்லை. உலகச் செய்திப் படங்களைப் பொருத்த வரையில் பெண்களை விட ஆண்களே விரும்புகின்றனர்.

"நல்ல அம்சங்களுடன் கூடிய குழந்தைகளுக்கான படங்களையே நாங்கள் அதிகம் பார்க்க விரும்புகிறோம்" என சகல குழந்தைகளும் பொதுவாக பதில் அளித்துள்ளனர்.

குண்டன்-1: முதலிலே இந்தப் பெரியவருக்கு டிக்கட் கொடுத்தனுப்பு அண்ணே!

குண்டன்-2: அதுக்குள்ளே யா? பாவம், இன்னும் கொஞ்ச நாள் இருக்கட்டும் அண்ணே!

சமீபத்தில் கும்பகோணத்தில் நடைபெற்ற அ. இ. சுதேசிக் கண்காக்ஷியில் நடைபெற்ற அரைடஜன் நாட்டியக் கச்சேரிகளிலும் தலைசிறந்து விளங்கியது பிரபல பானுமதியின் கச்சேரிதான்.

சண்பகவல்லி.

'சண்பகவல்லி'யின் சில அம்சங்களை சேலம், மதுரை, நாகர்கோயில், கோவை முதலிய நகரங்களிலுள்ள ரசிகர்கள் நன்கு ரசித்து வருகிறார்கள் என்று தெரிகிறது. எ. என், பெரிய நாயகி, டி. எஸ். பாலையா, எம். எஸ். விஜயாள் முதலியவர்கள்நடித்த படம்.

வரலக்ஷ்மியின் அடுத்தது.

நடிகை வரலக்ஷ்மியினுடையது அல்ல. படக் கம்பெனியான வரலக்ஷ்மி பிக்சர்ஸினுடையது தான். இவர்கள் தயாரிக்கப் போகும் படத்தில் பி. எஸ். சரோஜா நடிப்பாராம்.

நடன அரங்கேற்றம்.

ஸ்ரீ. கே. என். தண்டாயுதபாணியின் சிஷ்யையும், மேக்கப்மேன் ஸ்ரீ. கே. வி. ஸ்வர்ணப்பாவின் உறவினருமான செள. ஜெயலக்ஷ்மியின் நடன அரங்கேற்றம் மயிலை ரஸிக ரஞ்சனி சபாவில் சென்ற 6-ந் தேதி நடைபெற்றது. சினிமா உலகப் பிரமுகர்களும், நாட்டிய நக்ஷத்திரங்களும் வந்திருந்தனர். ஸ்ரீமதி கே. வி. ஜானகியின் பின்னணி கீதம் சிறப்பாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சினிமா ரசிகர்கள் சங்கம்

இந்திய சினிமா ரசிகர்கள் சங்கத்தின் ஆரம்ப விழா, மந்திரி ஸ்ரீ. டேனியல் தாமஸின் தலைமையில் ஆரம்பித்தது. சென்னை வுட்லண்ட்ஸ் ஹோட்டலில் சென்ற பதினொன்காந் தேதியன்று இவ் வைபவம் நடைபெற்றது. மந்திரி பேசுகையில், சினிமாத் தொழிலுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறதென்றும், அதற்கு இச்சங்கம் பேருதவி புரியும் என்றும் குறிப்பிட்டாராம். பிறகு நடிகர் ரஞ்சன் பேசினாராம். அவர் பேசுகையில், 'படித்தவர்கள் சினிமாத் தொழிலில் சேர வேண்டும், முக்கியமாக நடிப்புத் தொழிலில் இறங்க வேண்டும்' என்று குறிப்பிட்டாராம். பிறகு நிர்வாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்களாம். ஸ்ரீ. டி. ஆர். ஸ்ரீனிவாஸன் தலைவராகவும், ஸ்ரீ. இ. பி. சாமுவேல் காரியதரிசியாகவும், ஸ்ரீ. என். ராஜரத்னம் உதவிக் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இந்தச் சங்கத்தில் சேருபவர்கள் குறைந்த பக்ஷம் எஸ். எஸ். எல். ஸி. வரை படித்திருக்க வேண்டும். ஆண், பெண் இருசாராரும் சேரலாம். ஆனால் வயதுப்தினெட்டுக்குமேலிருக்கவேண்டுமாம். நாலணாக்கொடுத்து, பிறகு மாத மாதம் எட்டணா சந்தா செலுத்த வேண்டுமாம். அங்கத்தினர்கள் சில விசேஷ வைபவங்களுக்குத் தனியாக

இது செய்தி

விதிக்கப்படும் தொகையையும் செலுத்த வேண்டுமாம். சினிமாத் தொழிலே முன்னேற்றம் அடையச் செய்யவும், நடிகர்கள் மற்றும் முக்கியமான நபர்களிடமிருந்து சினிமாத் தொழில் பற்றிய சொற்பொழிவுகளைக் கேட்டு பலனடையவும் செய்வார்கள். இச் சங்கத்தில் சேர விருப்பமுள்ளவர்கள், "காரியதரிசி, சினிமா ரசிகர்கள் சங்கம் 63. ஹபிபுல்லா தெரு, திருவல்லிக்கேணி, தபால் பெட்டி 610" என்ற விலாஸத்திற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

லண்டனில் இந்திய டைரெக்டர்

ஆங்கிலோ—இந்திய பிலிம் திட்டமொன்றுடன் தற்சமயம் லண்டன் சென்றுள்ள இந்திய சினிமாப் படத் தயாரிப்பாளரும, டைரெக்டருமான எஸ்ரா மீர் சமீபத்தில் டென்ஹாம் ஸ்டுடியோவுக்கு வஜயம் செய்தார். இந்தியப் சூழ்நிலையுடன் பிரிட்டிஷ் இந்திய நடிக, நடிகைகளைக் கொண்டு பிரிட்டிஷ் படங்களைத் தயாரிக்க தாம் விருப்புவதாக எஸ்ரா மீர் கூறினர். இந்திய அரசாங்க மாஜி பிரதம செய்திப் படத் தயாரிப்பாளரான எஸ்ரா மீர் டாக்குமெண்டரி படங்கள் தயாரிப்பதில் நிபுணர். அவர் இந்திய அரசாங்கத்திற்கென சுமார் 150 டாக்குமெண்டரி படங்களைத் தயாரித்துள்ளார். அவர் தயாரித்த "கற்பக விருக்ஷம்" (தென்னை மரம்) என்ற டாக்குமென்டரி படத்திற்கு 1945-ம் வருஷ 'அமெரிக்க அகேடமி அவார்ட்' அளிக்கப்பட்டது.

உங்களுக்குத் தெரியுமா ?

1. 1946-ம் ஆண்டு பிரிட்டனிலுள்ள சினிமாக்களில் காட்டப் பட்ட படங்களின் மொத்த நீளம் 90,00,000 மைல்கள்.

2. சீன முழுதிலும் சுமார் 300 சினிமா மேடைகளே உள்ளன.

அஞ்சலிக்கு விபத்து

பாக்யா பிக்சர்ஸார் தங்களது "மங்கையர்க்கரசி"யைப் படமாக்கும் போது நடிகை அஞ்சலி தேவி ஒரு தீ விபத்துக்குள்ளானர். காக்ஷியில் ஒரு கட்டடம் தீப் பிடித்து எரிந்துகொண்டிருக்கிறது. ஒரு கம்பம் அப்படியே தடாலென்று கீழே விழுகிறது. அருகில் நடித்துக் கொண்டிருந்த அஞ்சலியின் பக்கம் கம்பம் விழ ஏற்பாடாகி அப்படியே நடைபெற்றது. ஆனல் தீயுடன் இருந்த கம்பம் விழும்போது அஞ்சலி தேவியின் முகத்தில் தீ ஜ்வாலை பட்டு முகம் கருகிவிட்டதாம். உடன் சிகித்சைக்கு எடுத்துச் சென்ருர்களாம்.

நிருத்ய சாம்ராட் பேசினர்

என். ஆர். ஆர். பார்ட்டியின் தலைவரான நிருத்ய சாம்ராட் கோபால கிருஷ்ண 'தென்னிந்திய நடனங்கள்' என்பது பற்றி சென்ற மார்ச் பதினைன்ருந்தேதி டில்லி அகில இந்திய ரேடியோவில் ஒரு சொற்பொழிவாற்றினராம்.

ரஞ்சன் பறக்கிருர்

சினிமா நடிகர் ரஞ்சனுக்கு மோட்டார், மோட்டார் ஸைக்கிள் இவைகளை ஓட்டுதல், குதிரைச் சவாரி ஆகிய இவை மட்டும் தான் தெரியும் என்று நினைத்து விடாதீர்கள். சமீபத்தில் விமானியாக பயிற்சி பெற்று, 'ஏ' லைசென்ஸ் பெற்ற விமானியாகி விட்டாராம. துடியாகப் பறந்து கொண்டிருக்கிருராம. நக்ஷத்திர மல்லவா? வானத்தில் பறப்பது இயற்கைதானே!

நக்ஷத்திரத்தின் கீதம்

பிரபல சினிமா நக்ஷத்திரமான எம். கே. தியாகராஜ பாகதவர், மஹாத்மா காந்தியின் மறைவுசம்பந்தமான இரண்டு உருக்கமான பாடல்களை ஒரு கொலம்பியா இசைத் தட்டில் பாடியிருக்கிருர்.

நான் சொல்றதை அப்படியே செய்தால்.
இந்த முதல் படத்திலேயே நல்ல பெயர் வாங்கிடலாம்
இப்ப நீ நேராய் பத்தடி நடந்து அந்தக் கம்பத்துக்கு எதிரில் வலதுபக்கம் திரும்பணும்----
...எங்கே ஸ்டார்ட்
ஆமா எதுக்காக ஐயா கையை வலது பக்கம் நீட்டினீர்?
அவர் பஸ் டிரைவராயிருந்த பழக்கம்!...

பிரம்ம லோகம்

சந்திரலேகா

எம். கே. ராதா, ரஞ்சன், ராஜகுமாரி, சுந்தரி பாய், என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், எல். நாராயண ராவ், வேலாயுதம், வேப்பத்தூர் கிட்டு, என். சீதாராமன், டி. இ. கிருஷ்ணமாச்சாரி, எச். கிருஷ்ணமூர்த்தி, சுப்பையா பிள்ளை முதலியவர்களும் மற்றும் நூற்றுக் கணக்கானவர்களும் நடிக்கும் ஜெமினியின் பிரம்மாண்டமான தமிழ்ப் படம் 'சந்திரலேகா' ஏப்ரல் 9-ந் தேதி வெளிவருவது நிச்சயமாகி விட்டது. இன்னும் சில இணைக்கப்பட வேண்டிய காக்ஷிகள் சம்பந்தமான படப்பிடிப்பு சில தினங்கள் நடைபெறுகிறதாம். ஸ்ரீ. எஸ். எஸ். வாஸனுக்கு புகழைத் தேடிக் கொடுக்கும் படமாக இது அமைந்திருக்கிறதாம். தென்னிந்தியப் பட சரித்திரத்திலேயே மிகவும், காலதாமதத்துடனும், அதிக பொருட் செலவுடனும் தயாரிக்கப்பட்ட படங்களில் இது முதன்மை வகிக்கிறது. ஜெமினியின் தொழிலாளர்களும் தமிழ் நாடும் பெருமைப் படவேண்டிய படமாயிருக்குமாம்.

ஔவை, ஞானசௌந்தரி, கோரா கும்பர்

ஜெமினியின் "சந்திரலேகா"வை வெளிக் கிளப்பிய பின்னர் ஜெமினி ஸ்டுடியோவில் **ஔவை, ஞானசௌந்தரி, கோரா கும்பர்** ஆகிய படங்களின் படப்பிடிப்பு மீண்டும் ஆரம்பமாகும் எனத் தெரிகிறது. 'ஞானசௌந்தரி'யில் ராதா, சுசிலா, லக்ஷ்மி முதலியவர்களும், 'ஔவை'யில் கே. பி. சுந்தராம்பாளும், 'கோரா கும்பர்'ரில் நாகையா, நாகர்கோவில் மஹாதேவன், புஷ்பவல்லி, கே. என். கமலம் முதலியவர்களும் நடிப்பார்களாம்.

ரத்ன குமார்

முருகன் டாக்கீஸின் 'ரத்ன குமார்' விரைவிலேயே திரைக்கு வந்துவிடுமாம். சின்னப்பா, பாலசுப்ரமண்யம், பானுமதி, மீனலோசனி, கிருஷ்ணன், மதுரம், கே. பி. கேசவன் முதலியவர்கள் நடிக்கிறார்கள். கிருஷ்ணன்-பஞ்சு டைரெக்ட் செய்து வருகின்றனர்.

பில்ஹணன்

திரைக்கு வரவேண்டிய படங்களில், டி. கே. ஷண்முகம், பகவதி நடிக்கும் சேலம் ஷண்முகா பிலிம்ஸ் டி. கே. எஸ். சகோதரர்களின் கூட்டுத் தயாரிப்பான 'பில்ஹணனும்' ஒன்று.

கோகுலதாஸி

நிரன் கம்பெனியாரின் 'கோகுல தாஸி' நெப்டியூன் ஸ்டுடியோவில் தயாராகிக் கொண்டிருக்கிறது. இதன் கதை ரஸமான காதல் சம்பவங்களைக் கொண்டதாம். ஹொன்னப்ப பாகவதர் இதில் நாரதராகவும், அரச குமாரனாகவும் வருகிறாராம். எம். வி. ராஜம்மா, ராமச்சந்திரன், சௌதாமினி முதலியவர்கள் நடித்து வருகிறார்கள். கே. சுப்ரமண்யம் இதன் டைரெக்ஷன் பொறுப்பை ஏற்றிருக்கிறார்.

நல்ல தம்பி

என்னெஸ்கே' பிலிம்ஸின் 'நல்ல தம்பி' நியூடோன் ஸ்டுடியோவில் வளர்ந்து வருகிறது. கிருஷ்ணன், மதுரம், பானுமதி, சகஸ்ரநாமம், முதலியவர்கள் நடித்து வரு

சமீபத்தில் சென்னையில் நூறுவது நாளைக் கொண்டாடிய "ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி"யில் காளி என். ரத்தினமும், வி. டி. ராஜகாந்தமும்.

யூனிடி பிக்சர்ஸின் "சாயி பாபா" தெலுங்குப் படத்தில் இக் காக்ஷியைக் காணலாம்.

கிருர்கள். "பைத்தியக் காரனே" டைரெக்ட் செய்த 'கிருஷ்ணன்-பஞ்சு' ஆகியவர்களே டைரெக்ட் செய்கிருர்கள். கதை வசனம் ஸ்ரீ. ஸி. என். அண்ணாத்துரை எழுதியிருக்கிருர்.

ராஜமுக்தி

நரேந்திரா பிக்சர்ஸின் 'ராஜ முக்தி' விரைவிலேயே திரைக்கு வருமாம். பாகவதரின் பாட்டும், சாமாவின் நடிப்பும், பானுமதி, ஜானகி இவர்களின் நடனமும் விசேஷ அம்சங்களாம்.

வேதாள உலகம்

மஹாலிங்கம், மங்களம், சாரங்கபாணி, கமலா, தாரா சௌத்ரி, முதலியவர்கள் நடிக்கும் ஏ. வி. எம். 'வேதாள உலகம்' காரைக்குடியில் தயாராகிக் கொண்டிருக்கிறது. விரைவிலேயே திரையிடப்படுமாம்.

'மின்மினி'

ஸ்ரீ பாரதி பிக்சர்ஸ் (கூட்டுத் தயாரிப்பாக) பிரகதி ஸ்டுடியோவில் தயாரித்து வரும் "மின்மினி.'க்கு சமீபத்தில் ஆபிஸ் அறை ஒன்றில் சில காக்ஷிகள் பிடிக்கப் பட்டன. விஜயகுமார், மேனகா, வாசு, காஞ்சன, கே. எஸ். குமார் முதலியவர்கள் நடிக்கிருர்கள். டி. வி. ராமநாத்தும் கிருஷ்ண ஸ்வாமியும் டைரெக்ட் செய்து வருகிருர்கள். 'சிரஞ்சீவி'தான் கதை வசனத்திற்குப் பொறுப்பாளி. விரைவிலேயே திரைக்கு வந்து விடுமாம்.

சம்சார நௌகா

பிரகதி ஸ்டுடியோவின் மற்ருெரு கூட்டுத் தயாரிப்பான 'சம்சார நௌகா'வும் விரைவிலேயே திரையிடப்படுமாம். நாடக மேடையில் பிரசித்தி பெற்ற இக்கதையில் பி. ஆர். பந்துலு, டி. பிரேமாவதி, டி. சூர்யகுமாரி, டி. ஆர். ராமச்சந்திரன், ஆர். கிருஷ்ணமூர்த்தி, ஆண்டாள் முதலியவர்கள் நடித்து வருகிருர்கள்.

போஜன்

ஜெயப் பிரகாஷ் பிக்சர்ஸ் தயாரிக்கும் 'போஜன்' சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது. டி. ஆர். சுந்தரத்தின் மேற்பார்வையில் எல். எஸ். ராமச்சந்திரன் டைரெக்ட் செய்து வருகிருர். பி. எஸ். கோவிந்தன், வரலக்ஷ்மி, ஆர். பாலசுப்ரமண்யம், காளி ரத்னம், ராஜகாந்தம் முதலியவர்களுடன் நடன நக்ஷத்திரங்களான லலிதா, பத்மினி, தாரா சௌத்ரி முதலியவர்களும் நடிக்கிருர்கள்.

பாரிஜாதம்

தாராசௌத்ரி, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் ஆகியவர்களின் பெயர்கள் லாவண்யா பிக்சர்ஸின் 'பாரிஜாத'த்தின் நடிக ஜாபிதாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. சோபனசலா ஸ்டுடியோவில், எ. டி. கிருஷ்ணசாமி டைரெக்ஷனில் உருவாகிறது. 'நாம் இருவர்' புகழ் டி. ஏ. ஜயலக்ஷ்மிகூட ஒரு பிரதான பாகத்தில் நடிக்க ஒப்பந்தமாகிவிட்டதாம்.

தேவநாரி

முன்பு பத்மா பிக்சர்ஸார் 'தேவகன்யா'வை தமிழில் தயாரித்தார்களல்லவா? இப்பொழுது அதே கதையைத் தெலுங்கில் தயாரித்து வருகிருர்களாம். பானுமதி, அஞ்சலிதேவி, நாகேஸ்வரராவ், பலிஜபள்ளி, டி. வி. சுப்பாராவ் முதலியவர்கள் நடித்து வருகிருர்களாம். ஆர். பத்மநாபன்தான் டைரெக்ட் செய்து வருகிருர். 'தேவகன்யா' தெலுங்கில் 'தேவநாரி'யாக மாறியிருக்கிறது.

மஹா பலி

நெப்டியூன் ஸ்டுடியோவில் தயாரான 'மஹாபலி' திரைக்கு வர நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. வரதாச்சாரி, லக்ஷ்மி, எம். கே. ராஜகுமார், லலிதா, பத்மினி, ராமசாமி ஐயங்கார் முதலியவர்கள் நடித்தது. ஜி. கே. பாஸ்கர் டைரெக்ட் செய்திருக்கிருர்.

அமெரிக்கர் செய்யும் அற்புதம்

எச். விஜயகுமார்

சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள்! ஆனால் முழுதும் உண்மையான விஷயம். நீங்கள் இதுவரைக்கும் எத்தனையோ ஆங்கில—தமிழ்—ஹிந்திப் படங்களைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் மனிதனே இல்லாமல் வெறும் பறவைகளும் விலங்குகளும் மட்டுமே பாத்திரங்களை ஏற்று நடிக்கும் படத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அப்படி ஒரு படம் இருப்பதாகச் சொன்னால்கூட நீங்கள் நம்ப மாட்டீர்கள். ஆனால் இருப்பதென்னவோ உண்மைதான். அப்படத்தை அமெரிக்கப் படக் கம்பெனியொன்று தயாரித்திருக்கிறது. படத்தின் பெயர்கூட விசித்திரமாக இருக்கிறது. என்ன தெரியுமா? "பில் அண்டு கூ" (Bill and Coo) என்பதாம்! அப்படத்தில் மனித வாசனையே கிடையாதாம். எல்லாப் பாத்திரங்களையும் பறவைகளும் மிருகங்களுமேதான் ஏற்று நடிக்கின்றன! அதுவும் உணர்ச்சியுடன், என்று அறியும்போது வியப்பும் மகிழ்ச்சியும் தானாகவே மனதில் ஏற்படுகிறதல்லவா? நம் நாட்டு நடிக-நடிகைகளில் சிலருக்கு நடிப்பு என்பதே என்னவென்று தெரியாமலிருக்கும்போது, பறவைகள்—மிருகங்கள் நடிக்கின்றன என்பதில் வியப்பு ஏற்படுவது சகஜந்தானே?

அப்படத்தைப் பார்க்கும்போது மயிர்ச் சிலிர்ப்பெடுக்கின்றதாம்! ஆரம்பம் முதல் கடைசி வரையில் அலுப்புத் தட்டவிடாமல் பார்ப்பவர்களை ஆனந்த சாகரத்தில்மூழ்கவைத்து விடுகிறதாம்! அதுமட்டுமல்ல! அமெரிக்கர்கள் எல்லாரையும் பைத்தியமாக அடித்து விட்டிருக்கிறதாம் அப்படம் என்றால் வேறு என்ன வேண்டும்?

"சந்திர மாலா" தமிழ்ப் படத்தில் இம்மூவரையும் சந்திக்கலாம்.

சாதாரணமாக, நாம் எவ்வளவோ படங்களில் நாய், குதிரை முதலிய பிராணிகள் மனிதர்களுக்குச் சமமாக—சில சமயங்களில் மனிதர்களுக்கு மேலாகவும் கூட—நடித்திருப்பதைப் பார்த்திருக்கிறோம். இன்னும் சில படங்களில் மனிதர்களைக் காட்டிலும் மிருகங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, மிருகங்களே கதையின் முக்கிய பாத்திரமாக நடிப்பதையும் கண்டிருக்கிறோம். இருந்த போதிலும் அப் படங்களில் மனித வாசனை அடியோடு இல்லாமல் போய் விடவில்லை. அதற்கு மாறாக மனிதப் பாத்திரங்கள் இல்லாவிட்டால் அப் படங்கள் அறைகுறையாக இருப்பதாகவே தோன்றும். ஆனால் மேற்கூறிய "Bill and Coo" என்ற படத்திலோ மனிதனின் வாசனை மட்டுமன்றி, மனித உலகின் வாசனைகூட இல்லை. அதாவது அப்படத்தின் சூழ்நிலை இவ்வுலகச் சூழ்நிலையாக இல்லாமல் ஏதோ ஒரு புதிய உலகத்தின் சூழ்நிலையாக இருப்பதுபோலத் தோன்றுகிறது! ஏனெனில் பூனை, நாய், கிளி போன்ற மிருகங்களும் பறவைகளும் படத்தின் பாத்திரங்களாக இருக்கும் போது அவைகள் வசிக்கும் வீடுகளும், நடமாடும் இடங்களும், உபயோகிக்கும் பொருள்களும்கூட அவைகளுக் கேற்றவாறு சிறிய அளவுகளில் இருக்க வேண்டியது அவசியமல்லவா? அவ்விதமே அப்படத்தில் சின்னஞ்சிறிய வீடுகளும் பொருள்களும், குறுகிய இடங்களும் இருக்கின்றன. மேலும் சின்னச் சின்ன மரம், செடி, கொடி, ரயில், டிராம் பஸ் முதலியவைகளும் கூட இருக்கின்றன. படத்தைப் பார்க்கும்போது மனித உலகமே இருப்பதாக நமக்குத் தோன்றுவதில்லை. எல்லாம் பறவைகளின் ராஜ்யமாகவும் மிருகங்களின் ஆதிக்கமாகவுமே தோன்றுகின்றது. மேலும் அப்

"ரத்ன குமார்" படத்தில் பானுமதியும், சின்னப்பாவும்

மரகதா பிக்சர்ஸ் "பிழைக்கும் வழி"யில் நடைபெறும் சீட்டுக் கச்சேரி.
(பாலய்யா, டி. ஏ. ஜெயலக்ஷ்மி, துரைராஜ் முதலியோர்)

படத்திலேயே பறவைகளுக்கு என்று சினிமாக் கொட்டகையும்கூட இருக்கிறது. அதுவும் சின்னஞ் சிறிய அளவில்?

படத்தின் கதை என்ன தெரியுமா? சொல்கிறேன்? அமெரிக்காவில் 'ஸர் பண்டேல்' என்ற ஒரு ஊர் இருக்கிறதாம்! அவ்வூரின் குடிகள் யார் தெரியுமா? பறவைகள், பூனைக்குட்டிகள், குரங்கப்பர்கள், நாய்க்குட்டிகள், ஒரு குட்டி முதலை! இவைகள் தாம்! கதையின் முக்கிய பாத்திரங்கள் ஒரு ஆண் கிளியும் ஒரு பெண் கிளியும்தான். ஆண் கிளியின் பெயர் தான் மிஸ்டர் பில் என்பது. பெண் கிளியின் பெயர் மிஸ் கூ. மிஸ்டர் பில்லும் மிஸ் கூவும் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றார்கள். அதிலிருந்து கதை வளர்கிறது.

ஆனால் காதல் என்பது இலேசானதா? எவ்வளவோ இடைஞ்சல்களையும் அல்லல்களையும் கடந்தான பிறகல்லவா இன்பங் காணமுடியும்? அவ்வூரின்மீது "கருங் காக்கை"கள் படையெடுத்து வருகின்றன. மணம் முடித்துக்கொண்டு வாழ்க்கைப் பிரயாணத்தை ஆரம்பித்துவிட்ட பில், கூ, ஆகிய இரு காதலர்களுக்கும் ஆபத்து நேரிடுகிறது. மிஸ் கூ தங்கியிருக்கும் ஹோட்டலில் எதிர்பாராத விதமாகத் தீப்பிடித்து விடுகிறது. தீயை அணைப்பதற்குத் தீயணைக்கும் படையினர் வருகிறார்கள். நம் மதராஸ் பயர் ஸர்வீஸில் உள்ள படையாட்கள் போலத்தான் அவர்களும் இருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை! அவர்களும் பறவைகள்தாம்! ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

பின் கதை வளர்கிறது. பறவைகளின் எதிரியான "கருங் காக்கை"கள் ஆகாய மார்க்கமாகப் படையெடுத்து வரும்போது அவ்வூரின் மற்றப் பிரஜைகளான பறவைகள் கொட்டகையில் படம் பார்த்துக் கொண்டிருக்

"சம்சார நௌகா" படத்தில்
டி. கே. உபேந்திரநாத், சூர்யகுமாரி.

கின்றன! அபாயச் சங்கு ஊதுகிறது. அதைக் கேட்டதும் பறவைகள் மறைவிடங்களில் போய்ப் பதுங்கிக் கொள்கின்றன.

கதையின் முடிவு இன்ப முடிவாக இருக்கிறது. மிஸ்டர் பில் எதிரிகளை முறியடிக்க "அணு சக்தி"யைக் கண்டு பிடிக்கிறார். பிறகு அதன் உதவியால் கருங்காக்கைப் படைகளை மண்ணைக் கௌவும்படி செய்கின்றன பறவைப் படைகள்!

சண்டையில் தேசத்துக்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களுக்கு ஞாபகச் சின்னங்கள்கூடக் கட்டப்படுகின்றன! இதுதான் படக் கதையின் முக்கிய கருத்து.

கதையைப் பார்த்தவுடன் "என்னடா இது? பாப்பா கதையாக இருக்கிறதே? பாப்பாக்களுக்காகத் தான் படம் தயாரித்திருக்கிறார்கள்" என்று நினைத்துவிடவேண்டாம். அல்லது வால்ட் டிஸ்னேயின் கார்ட்டூன் படமோ என்றும் எண்ணி விடவேண்டாம். உண்மையான பறவைகள் உண்மையாக நடித்து எடுத்த உண்மையான படம் இது! எண்பது நிமிஷங்கள்வரைக்கும் ரஸிகர்களைத் தடைக் கட்டிய நாகம்போல அசையாமல் அலுங்காமல் இருக்கும்படி செய்து விடுகிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

என்னவோ படத்தைப் பார்த்து விட்டு நாம் வந்து விடுகிறோம்! ஆனால் இப்படத்தை எடுப்பதில் டைரெக்டருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்ட நஷ்டங்களைக் கற்பனை செய்து பார்க்கக் கூட நமக்கு நேரமேது? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் மிருகங்களும் பறவைகளும் எப்போதும் மனிதனின் இஷ்டப்படியே நடக்கின்றனவா என்ன? மேலும் டைரெக்டர் நம்மிடம் இன்னவிதமான வேலையைத் தான் எதிர்பார்க்கிறார் என்பது அரை டஜன் அறிவுபடைத்த நமது மனித நடிகர்களுக்கே சில சமயங்களில் தெரியாதிருக்கும்போது, பாவம் ஐந்தும் அதற்கும் குறைவான எண்ணிக்கையுடைய அறிவுகளைப் படைத்த விலங்கினங்களுக்கும் புள்ளினங்களுக்கும் அது எப்படித் தெரிந்திருக்க முடியும்? சாதாரணமாகக் குழந்தைகளையோ பழக்கிய நாய் பூனைக்குட்டிகளையோ படம் பிடிப்பதற்குள்ளேயே பாதி உயிர் போய்விடுகிறது என்பது "காமிரா" நிபுணர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கலாம். அப்படியிருக்கும்போது முழுதாக எண்பது நிமிஷங்கள் வரைக்கும் ஓடும் இந்தப் படத்தை எடுப்பதற்குள் டைரெக்டர் என்ன பாடு பட்டிருப்

எங்கள் வியாபார ஸ்தலங்கள்

பெங்களூர், பனாரீஸ், காஞ்சீவரம்,
பெங்கால் பட்டுப் புடவைகளுக்கும் இன்னும்
எல்லாவித ஜவுளி தினுசுகளுக்கும் பெயர்
— போனவை —

கால நிலைமை அனுசரித்தே விலை

P.R. நாராயணசாமி அய்யர்

Branch :
Fancy Hall
சைனா பஸார்,
திருச்சினாப்பள்ளி.

பட்டு நூல்
ஜவுளி வியாபாரம்
பெரியகடை வீதி,
திருச்சினாப்பள்ளி.

பார், என்னென்ன துன்பங்களை அனுபவித்திருப்பார் என்பதை நினைத்துப் பார்த்தால்கூட மூளை வேலை செய்ய மறுத்து விடுகிறது.

படத்தில் ஒரு இடத்தில் மிஸ்டர். பில்லும், மிஸ் கூவும் படகில் உல்லாஸப் பிரயாணம் போகும் : கட்டம் ஒன்று வருகிறது. வாத்துக்குஞ்சுகள் நீரில் நீந்தியவாறே படகைச் செலுத்துவதாகவும் காட்டப் பட்டிருக்கிறது. ஆனால் "பில்"லாகவும் "கூ"வாகவும் நடிக்கும் கிளிகளுக்கு டைரெக்டரின் உள்ளம் எப்படித் தெரிய முடியும்? அல்லது படகில் உட்கார்ந்துகொண்டு காதல் சல்லாபம் செயய வேண்டுமென்றுதான் அவைகளுக்குத் தெரிந்திருக்க முடியுமா? மேற்கூறிய கட்டம் சுடப்பட்டுக் கொண்டிருக்கும் போது திடீரென்று கிளிகள் படகிலிருந்து பறந்து சென்று நீரில் நீந்தி விளையாட ஆரம்பித்து விட்டனவாம். அதைக் கண்ட வாத்துக் குஞ்சுகள் பயந்து ஓட ஆரம்பித்து விட்டனவாம்.

"பில்ஹணன்" தமிழ்ப் படத்தில் யாமினியின் தந்தையாக நடிக்கும் டி, கே, பகவதி.

இவைகளைக் கேள்விப் படும்பொழுதுதான் டைரெக்டருக்கு எவ்வளவு பொறுமை இருந்திருக்க வேண்டும் என்பதும், அவர் எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பார் என்பதும் ஒருவாறு தெரிகிறது!

எது எப்படியிருந்தாலும் இப்படம், டைரெக்டரும் உற்பத்தியாளருமான கேன் மர்ரே என்பவருக்கு அமோஹ வெற்றியை அளித்திருக்கிறது. அவரது இந்த நடிக-நடிகைகள்(?) எவ்வளவோ படங்களில் நடித்திருக்கின்றன வென்றாலும், இந்த முழு நீளப் பிராணிப் படம் எல்லாப் படங்களையும்விடத் தனிப்பட்டு நிற்கிறது. இப் படப் பிடிப்பின்போது எவ்வளவோ பொறுமையும், முயற்சியும், ஊக்கமும், உத்சாகமும், அறிவும், அன்பும் அவருக்குத் தேவையாக இருந்தன. அவர் சாதித்துள்ள காரியம் யாரா

ஜூபிடரின் "அபிமன்யு" தமிழ்ப் படத்தில் யூ ஆர். ஜீவரத்தினம் நடனம் ஆடுகிறார்.

னும் சாதிக்க முடியாத தொன்றாகும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை!

வால்ட் டிஸ்னேயின் கார்ட்டூன் படங்கள் இப்போது எங்கும் சாதாரணமாகப் பரவி, அநேகமாக ஒவ்வொரு ஆங்கிலப் படத்துடனும் காண்பிக்கப் படுகின்றன. ஆகவே அதில் மோஹம் இப்போது குறைந்து கொண்டே வருகிறது. மேலும் இக் கார்ட்டூன் படங்களைப் பார்க்கும் போது நமக்குச் சற்று நேரம் குதூகலம் ஏற்படுகிறது என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை. ஆனால் கேன் மர்ரேயின் இந்தப் படமோ உலகிலேயே இதுவரைக்கும் யாரும் செய்திராத புதுமையாக உள்ளது. மேலும் இப் பிராணிப் படத்தின் பாத்திரங்களின் ஒவ்வொரு செய்கையிலும், படத்தின் ஒவ்வொரு அடியிலும் மனித இதயத்தின் ஆழத்தைத் தொடும் சக்தி இருக்கிறது.

மொத்தத்தில், இப்படம் இதுவரைக்கும் தயாரிக்கப்பட்டுள்ள எந்தப் படத்தையும் மீறி விட்டதோடல்லாமல் எப்படமும் அளித்திராத மஹத்தான வெற்றியையும், நிறைய பணத்தையும், அழியாத புகழையும் கேன் மர்ரேக்கு அளித்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

இவ்விதப் படங்களை எடுத்து அமெரிக்கர்கள் புதுமைகளையும், அற்புதங்களையும் செய்து கொண்டிருக்கையில் நம் தமிழ் நாட்டுப் பட முதலாளிகளோ இன்னும் "வள்ளி"களையும், "பவளக் கொடி"களையும், "வத்ஸலா கலியாணங்"களையுமே எடுப்பதில் முனைந்திருப்பதைக் காணும்போது, "ஏ, கடவுளே! தமிழ் நாட்டுக்கு என்றுதான் விமோசனம் பிறக்கப் போகிறதோ? அமெரிக்கா போல நம் நாட்டில் படம் எடுப்பதற்கு இன்னும் எத்தனை தலைமுறைகள் தான் செல்லவேண்டுமோ?" என்று சொல்லத் தோன்றுகிறது அல்லவா?

ஈழமணி

(மாத வெளியீடு. ஆசிரியர்: முருகேச பிள்ளை. காரியாலயம்: தென் புலோலியூர், பருத்தித்துறை, யாழ்ப்பாணம்)

இலங்கை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் இப் பத்திரிகையின் முதல் இதழ் வரப்பெற்றோம். "தமிழ் வாழ்க!" என்று சொல்லிக் கொண்டே 'ஈழமணி' கிண் கிண் என்று தனது இலக்ஷியத்தை நாதம் செய்கிறது. பல தமிழறிஞர்களுக்குப் பேர் போன ஈழத்திலே இந்த "ஈழமணி"க்கு நல்ல ஆதரவு கிடைக்கும் என்று அதன் ஆசிரியர் கருதுவது போலவே நாமும் கருதுகிறோம். விலை குறிப்பிடப்படவில்லை.

KAREEM WATCH COMPANY

(Guarantee Repairers, Dealers, General Merchants and Commission Agents)

— புதிதாய் வந்துள்ளன —

கிராமபோன் ஸ்பேர் பார்ட்ஸ், புதிய வாட்சுகள், புதிய பவுண்டன் பேனாக்கள், மற்றும் பான்ஸி சாமான்கள், இவை விலை சரஸமாயும், உத்திரவாதமுடனும் கிடைக்கும்.

காட்சி சாலை:

53, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை.

குண்டூசி டைரி

பிப்ரவரி

1948

தேதி

8. தென்னிந்தியாவில் டெக்னிஷ்யன்ஸ் சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் ஒன்றில் மஹாத்மாவின் மரணத்திற்காக அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

10. காந்திஜீயின் ஈமக்கிரியைகளைக் காட்டும் ஒரு செய்திப்படம் லண்டனில் திரையிடப்பட்டது.

11. ஸ்ரீ சக்தி நாடக சபையார் தங்களது கடைசி நாடகமான "ராம.பக்தி"யை ரஸிக ரஞ்சனி சபாவில் நடத்தி விட்டு முகாமை வேலூருக்கு மாற்றிக் கொண்டனர்.

12. மஹாத்மாவின் அஸ்தி கரைப்புவிழா சம்பந்தமாக சென்னை தியேட்டர்கள் மூடப்பட்டன.

13. சென்னை கெயிட்டியிலும், லக்ஷ்மியிலும் "தேவதாஸி" திரையிடப்பட்டது.

14. இந்திய தேசிய கீதம் பற்றி கே. சுப்ரமண்யம் இந்தியப் பிரதமருக்கு ஒரு தந்தியை அனுப்பினார்.

18. ஸ்ரீமதி டி. ஏ. மதுரம் ஒரு பெண் குழந்தைக்கு முதன்முதலில் தாயாரானார்.

20. கேரளா டாக்கீஸின் சமூகப் படமான "நிர்மலா" கோவை வின்ஸெண்ட் தியேட்டரில் திரையிடப்பட்டது.

கந்தர் பில்ம்ஸ் "ஷண்பகவல்லி" ஈரோடில் திரையிடப்பட்டது.

21. ஜுபிடரின் "ராஜகுமாரி" சென்னை ஸ்டார், கிரௌன் ஆகிய இரு தியேட்டர்களில் திரையிடப்பட்டது.

Printed by P. Arunachalam at the Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 246, Thambu Chetty Street, Madras 1.